BTA
BERGEN TAMILSK AVIS

# தேன்தமிழிதழ்

Org.nr: 926 840 320

ISSN 2703-8440

Bergen Tamilsk Avis,
Krohnegården 5b,
5146 Fyllingsdalen,
Norway.



**கொ**ரோனா தொற்று நோய் பரவல் ஆரம்பிக்கப்பட்ட நாட்களில் இருந்து உலக நாடுகள் முழுவதும் தொடர்ச்சியாகவே பெரும் சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றன. அனைத்து முக்கிய துறைகளும் முடக்கப்பட்ட நிலையில் உலகப் பந்து மெதுவாக சுற்றிக் கொண்டிருக்கின்றது.

கல்வி, கலை, விளையாட்டு, பொருளாதாரம், அரசியல், ஆன்மீகம், சமூக முன்னெடுப்புக்கள் அனைத்துமே பல்வேறு வழிகளிலும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. கொரோனா வைரஸ் சீனாவில் தோன்றி பின்னர் இங்கிலாந்தில் இவ்வைரஸ் மாறுபாடுடைந்து புதிய இயல்போடு 'இங்கிலாந்து வைரஸ்' என்று தோன்றியது. இது covid-19 வைரஸை விடவும் வீரியம் கூடியதாக இருந்தது. அத்தோடு இலகுவாக பரவவும் செய்தது. அதன் பின்னர் தென் ஆப்பிரிக்காவில் 'தென் ஆப்பிரிக்கா வைரஸ்'. அதனைத் தொடர்ந்து பிரேசில் வைரஸ். இவையெல்லாம் ஒன்றையொன்று போட்டி போட்டு அதிக தாக்கங்களை விளைவிப்பதாகவே உருவாகின.

அதாவது நாட்டுக்கு நாடு அணுகுண்டுகளை தயாரிப்பதில் போட்டியிடுவது போலவென்று கூறலாம். இறுதியாக மேற்கூறிய வைரசை எல்லாம் வீழ்த்திக்கொண்டு 'இந்தியா வைரஸ்' தோன்றி மிக மிக உக்கிரமாக தாக்கி பல லட்சம் மக்கள் உயிரிழந்து கொண்டிருக்கின்றார்கள்.
இது தற்கால கொரோனா தொற்றுநோயின் நிலைமை.

இத்தொற்று நோயின் தாக்கம் உடல் ரீதியாக மட்டுமல்ல, ஏராளமான மக்களின் உள நிலையையும் வெகுவாகப் பாதித்துள்ளது. தனிமைப்படுத்தல், பாடசாலைகள் மூடப்பட்டமை, வேலைத் தலங்கள் மூடப்பட்டமை, வழிபாட்டுத்தலங்கள் மூடப்பட்டமை, குடும்ப, சமூக, கொண்டாட்ட நிகழ்வுகள் நிறுத்தப்பட்டமை, வீட்டுக்குள்ளே முடக்கப்பட்டமை, பொழுதுபோக்கு கலைக் கூடங்கள், சினிமா கொட்டக்கைகள் மூடப்பட்டமை என மனிதகுலம் முன்னர் சந்தித்திராத மிகப்பெரும் சவால்களை தற்காலத்தில் சந்தித்து வருகின்றது. பல மனித மனங்கள் இதனை தாங்கும் சக்தியை இழந்து கொண்டிருக்கின்றன. பலர் மனநிலை பாதிக்கப்பட்டு வருகிறார்கள். பலர் தமது உயிரையே மாய்த்துக் கொள்ளுமளவுக்கு தள்ளப்படுகிறார்கள். இந்நிலை தொடராது நம்மை நாமே உடல் ரீதியாக மட்டுமல்ல,
உளரீதியாகவும் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது அதி முக்கியமானதாகும்.

நோய்த் தாக்கத்தை எதிர்கொள்ள முடியாது மனிதன் தத்தளிக்கும் அதே வேளையில், உலகில் மனிதாபிமானமற்ற ஏனைய பல விடயங்கள் அரங்கேறிக் கொண்டே இருக்கின்றன. இஸ்ரேல்-பாலஸ்தீன யுத்தம் நூற்றாண்டு காலமாய் நடைபெற்று வருகின்றது. பெரும் நோய்த் தொற்றில் மனிதகுலம் அல்லலுறும் இக்கணத்தில் கூட அவர்கள் தமது யுத்தத்துக்கு சிறிது இடைவேளை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. அங்கு மக்கள் படும் அவலங்கள் எழுத்துக்களில் வடிக்க முடியாததாக உள்ளன.

ஸ்ரீலங்கா கடலில் சூப்பர் eco 2700 என்ற கொள்கலன் கப்பல் தீப்பிடித்து எரிந்தமை. இச்சம்பவம் நமது கடல் வளத்தில் ஏற்படுத்திய பாதிப்பு என பல்வேறு விடயங்களை மனிதகுலமும், இயற்கையும் எதிர்கொண்டு வருகின்றன.

மடியிலிருந்த யாவும் இழந்து போனவைகளாகவும், கையில் அகப்படுவதை எடுப்பதா, விடுப்பதா என்ற அச்சங்களுக்குள் தள்ளப் பட்டவர்களாகவும் காலம் மனிதகுலத்தை மட்டுமல்ல புவிவாழ் ஜீவராசிகள் அனைத்தையுமே கொடும் இருட்டுக்குள் தள்ளி விட்டுள்ளது. இந்த நிலையில்...

சமூக உறவு, ஒன்று கூடல்கள், நட்பு வட்டம் அனைத்தையும் இழந்து நிற்கும் நமது உள்ளங்களோடு பேசும் சிறந்த ஒரு ஊடகமாக தேன் தமிழ் பயணிக்கும்பொருட்டு இன்னும் இன்னும் எமது உழைப்பை வலுப்படுத்தச் சித்தமாக உள்ளோம். எமது வாசக உறவுகளின் ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் வரவேற்கிறோம்.

தொடர்புகட்கு:
ttoosai@gmail.com
அல்லது,
antonipillai@hotmail.com
Tlf: (0047) 924 636 74















# நாட்டை மட்டுமல்ல
# வளங்களையும் தாரைவார்க்கும் இலங்கை அரசு
## X-Press Pearl கப்பல் தீ விபத்து சொல்லும் செய்தி



ப்ரியமதா பயஸ்

எக்ஸ் - பிரஸ் பேர்ள் என்பது சிங்கப்பூரில் பதிவுசெய்யப்பட்ட Super Eco 2700 - வகுப்பு கொள்கலன் கொண்ட கப்பலாகும். சுமார் 186 மீற்றர் (610 அடி) நீளம் கொண்ட இந்த கப்பல் எக்ஸ் - பிரஸ் ஃபீடர்களால் இயக்கப்படுவதாகும். இந்தக் கப்பல் 2021ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் சேவையில் நுழைந்தது ஆனால் மூன்று மாதங்களில் கப்பல் தீப்பிடித்து எரிந்து அழிந்துள்ளது.

இந்த கப்பலின் தீப்பிடிப்பு, அழிவு, அது ஏற்றிவந்த கொள்கலன்கள் தொடர்பில் உலகளவில் எழுந்துள்ள சர்ச்சைகளும் இலங்கை அரசு எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளும் மிக நுணுக்கமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயங்களாக இப்போது பேசுபொருளாகி இருக்கிறது.

20 மே 2021 அன்று, இலங்கையின் கொழும்பு கடற்கரையில் எக்ஸ்-பிரஸ் பேர்ள் தீப்பிடித்தது. இந்த கப்பல் மே 27க்குள் முழுவதும் தீயில் எரிந்து கடல் நீரில் மூழ்கி மொத்த இழப்பை அறிவித்திருக்கிறது. ஆனால் கப்பலின் எஞ்சிய பாகங்களும் கண்டைனர்களும் இன்னமும் மிதந்து கொண்டிருப்பதோடு அது தொடர்பான பிரச்சனைகளும் பாதிப்புகளும் கூடிக்கொண்டே செல்கின்றது. 2021 மே மாதம் 27ஆம் திகதி இலங்கை தீயணைப்பு வீரர்களால் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. சுமார் 12 நாட்கள் தொடராக எரிந்த இந்தக் கப்பல் ஜூன் 2ஆம் திகதி கடலின் ஆழமான நீருக்குக் கொண்டு செல்லப்பட்டபோது அரைவாசிப்பகுதி மூழ்கியது.

இந்த சம்பவம் இலங்கை வரலாற்றில் மிக மோசமான கடல் சுற்றுச்சூழல் பேரழிவாக இருக்கின்றது. எண்ணெய் மற்றும் இரசாயனப் பொருட்களுடன் கப்பல் கடலுக்குள் மூழ்கிக்கொண்டு இருப்பது இலங்கை கடற்பரப்புக்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு சூழல் பாதிப்பை ஏற்படுத்தப்போகிறது.

இந்த கப்பல் 2021 மே மாதம் 15ஆம் திகதி இந்தியாவின் ஹசிரா துறைமுகத்திலிருந்து புறப்பட்டது. கப்பலில் 25டன் நைட்ரிக் அமிலம், பிற இரசாயனங்கள், அழகுசாதனப் பொருட்கள் தயாரிக்கும் மற்றும் குறைந்த அடர்த்தி கொண்ட பொலித்தீன் (எல்.டி.பி.இ) துகள்கள் உள்ளிட்ட சூழலுக்குக் கேடு விளைவிக்கும் 1486 கொள்கலன்களை சுமந்திருந்தது.

இந்த கொள்கலன் கப்பல் மே மாதம் 19ஆம் திகதி அன்று கொழும்பு துறைமுகத்தை நெருங்கி மலேசியாவின் போர்ட் கிளாங்கிலிருந்து கட்டார் மற்றும் டுபாய்க்கு 30 நாள்களில் திரும்பும் கால எல்லையில் இருந்தது.

ஆனால் கப்பல் தீப்பிடிக்கும் தறுவாயில் இருந்தது என்பதை கப்பல் கப்டன் உட்பட அனைவரும் அறிந்திருந்ததாகவே நம்பப்படுகிறது.

இலங்கைக் கடற்பரப்பில் இந்த கப்பலை அனுமதித்தமை தொடர்பில் எழுந்துள்ள விமர்சனங்கள் நியாயமானவையாகவே இருக்கின்றன.

கப்பல் பெரும் விபத்துக்குள்ளாக போகிறது என்பதை கப்பல் கப்டன் நன்கு அறிந்தவராக அந்த கப்பலை நங்கூரமிட்டு கப்பலில் உள்ள கெண்டைனர்களை வெளியேற்ற கட்டார் மற்றும் குஜராத் துறைமுகங்களிடம் அனுமதி கோரி இருக்கிறார். ஆனால் இந்த இரண்டு பெரிய நாடுகளும் அதற்கான வசதிகள் தம்மிடம் போதியளவு இல்லை என்கின்ற உண்மைக் காரணங்களைக் கூறி கப்பல் தரிப்பதற்கும் கசிவு ஏற்பட்ட அமிலம் நிரப்பிய கெண்டைனர்களை வெளியேற்றவும் மறுத்திருக்கின்றன. ஆனால் எந்தவித வளங்களும் திருப்தியாக இல்லாத இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான துறைமுகம் ஏன் அதனை அனுமதித்து, இந்தப் பெரிய அழிவை விலை கொடுத்து வாங்கி இருக்கிறது என்பதே இப்போது எழுந்துள்ள மிகப்பெரும் கேள்வி.

இலங்கையின் துறைமுகங்கள் சட்டம், அதைவிட உலக துறைமுக வழக்க சட்டம் என்பவற்றின் மூலம் கப்பல் பாரிய தீப்பிடித்தலுக்கு ஆளாக உள்ளதை கப்பலின் கப்டன் கண்டிப்பாக இலங்கை துறைமுக அதிகாரிகளிடம் தெரிவித்திருப்பார் என்பது மறுக்க முடியாத உண்மை.

இவற்றை அறிந்தும், தெரிந்தும் இந்த பெரிய அழிவுக்கான பாரத்தை தன் தலையில் இலங்கை சுமக்க முன் வந்தது எதற்காக?

நைட்ரிக் அமில கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாக இலங்கை அதிகாரிகள் நம்புகின்றனர். இந்தக் கப்பல் உரங்கள் மற்றும் வெடிபொருட்களின் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் 25டன்னுக்கும் அதிகமான அரிக்கும் அமிலத்தை ஏற்றிச் சென்றது என்பதும் இலங்கைக்கு மிகத் தெளிவாகவே தெரியும்.

இலங்கையில் உள்ள கொழும்பு துறைமுகத்திற்குள் நுழைவதற்கு முன்பு, கட்டார் ஹமாத் துறைமுகத்திலும், இந்தியாவின் ஹசிரா துறைமுகத்திலும் கொள்கலன் கப்பல் உள் நுழைய மறுக்கப்பட்டது, கட்டார் மற்றும் இந்திய துறைமுகங்களில் கொள்கலன் கப்பல் உள் நுழைய அனுமதி மறுப்பது தொடர்பான அறிக்கைகளை எக்ஸ்-பிரஸ் பேர்லின் தொழில்நுட்பவியலாளர்கள் உரியவர்களுக்கு அறிவிக்கின்றனர்.

நைட்ரிக் அமிலம் கசிந்த ஒரு கொள்கலனைக் குழுவினர் கண்டுபிடித்ததாகவும், கட்டார் மற்றும் ஹசிராவில் உள்ள ஹமாத் துறைமுகத்தில் அவற்றை இறக்க அனுமதி கோருகின்றனர் "கசிந்த அமிலத்தை சமாளிக்க உடனடியாக சிறப்பு வசதிகள் அல்லது நிபுணத்துவம் கிடைக்கவில்லை" என்று அவர்களது கோரிக்கை மறுக்கப்பட்டது தொடர்பிலும் இலங்கை அறிந்திருக்கிறது.

கொழும்பு துறைமுகத்தின் வடமேற்கே 9.5 கடல் மைல் (17.6 கி.மீ 10.9 மைல்) தொலைவில் மே 20ஆம் திகதி அன்று கப்பல் தீப்பிடித்தது. தீக்கான காரணத்தைக் கண்டறியும் பொருட்டு கப்பலில் ஏறிய இலங்கை கடற்படை, இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் சேர்ந்து, கப்பலில் இரசாயனங்கள் கொண்டு செல்லப்பட்டதன் விளைவாக தீ பற்றியிருக்கலாம் என்று அறிக்கை வெளியிடுகின்றனர். தீ விபத்தின் போது, கப்பலில் 25 பேர் அடங்கிய குழுவினர் இருந்தனர்.

ஆரம்ப அறிக்கைகள் இந்த சம்பவத்தை அமிலம் கசிந்ததாக இணைத்திருந்தாலும், துறைமுக அமைச்சர் டி சில்வா, எக்ஸ்-பிரஸ் பேர்ள் தீப்பிடித்தது தொடர்பில் விசாரணை தேவை என்று கூறினார்.

மே 25ஆம் திகதி அன்று, கப்பலுக்குள் ஒரு பெரிய வெடிப்பு நிகழ்ந்தது. 25 ஊழியர்களும் கப்பலில் இருந்து பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். வெடிப்பின் போது காயமடைந்த இரண்டு இந்திய குழு உறுப்பினர்கள் கொழும்பின் இலங்கை தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

மே 25ஆம் திகதி தீ தொடர்ந்து எரிந்து கொண்டிருந்தது. பிற்பகல் வரை கொள்கலன்கள் கப்பலில் இருந்து கடலுக்குள் விழுந்தன. இலங்கை கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையம் (MEPA) தீ மோசமாகிவிட்டதால், கப்பலின் இரண்டாம் அடுக்கு எண்ணெய் கசிவு ஏற்பட்டதை அறிவித்தது. இந்திய தீயணைப்பு மற்றும் மாசு கட்டுப்பாட்டு கடலோரக் காவல்படைக் கப்பல்கள், கடல்சார் உளவு விமானம் ஆகியவற்றை இலங்கைக்கு அனுப்பி கட்டுப்படுத்த உதவியது. அந்த மீட்பு நடவடிக்கைக்கு இந்தியா ஓபரேசன் சாகர் அராக்சா-2 என்று பெயரிட்டது.

எக்ஸ்-பிரஸ்பேர்ல் கப்பலில் 278 டன் எரிபொருள் எண்ணெய் மற்றும் 50 டன் எரிவாயு எண்ணெயும் மசகு எண்ணெய் நிறைந்த சுமார் 20 கொள்கலன்களும் உள்ளன. இவை இலங்கை சிறு தீவையே மிக மோசமாக பாதிக்கப்போகிறது. முற்றிலும் கடலால் சூழப்பட்ட, கடல் வளத்தை மூலாதாரமாகக் கொண்ட நாடு அந்த வளங்களின் அழிவாலும், சூழல் பாதிப்பால் முற்றுமுழுதாக இயற்கை பேரிடர்களை சந்திக்கப்போகின்றது என்பது நிதர்சனமான உண்மை.

இலங்கைக் கடலில் கலந்துள்ள நைட்ரிக் காடி என அழைக்கப்படும் HNO3 வன் அமிலமானது மிகவும் அரிப்புத்தன்மை கொண்ட, கடுமையான மாறாத புண்களை உண்டாக்ககூடிய வன் அமிலம் இதை aqua fortis என்றும் spirit of nitre என்றும் கூறுவதுண்டு. முதன்முதலில் 1650ஆம் ஆண்டு கிளாபர் இதனைத் தயாரித்தார். பின்னர் 1784 ஆம் ஆண்டில் கேவண்டிஸ் என்பவர் ஈரங்கலந்த ஒக்சிசன் மற்றும் நைட்ரசன் கலவையை மின்பொறியில் செலுத்தி நைட்ரிக் அமிலம் தயாரிக்கலாம் என்று தெரிவித்தார்.

நைட்ரிக் காடி தூய்மையாக இருக்கும் பொழுது நிறமற்றதாக இருக்கும், ஆனால் நாள்பட வைத்திருந்தால் நைட்ரசன் ஒக்சைடு சேர்வதால் மஞ்சளாக மாறும். நீரக் கரைசலில் 86% உக்கும் மேலாக நைட்ரிக் காடி இருக்குமானால் அதனை புகையும் நைட்ரிக் காடி என்பர்.

பொதுவாக நைத்திரிக் அமிலம் ஒரு வன்னமிலமாகும். ஏனெனில் செறிந்த நைத்திரிக் அமிலத்தால் இலகுவில் தாக்கமடையாத செப்பையும் தாக்கமடையச் செய்ய முடியும். மற்றைய உலோகங்களுடன் உக்கிரமாகத் தாக்கமடையக் கூடியது. உயிரினங்களின் தோலில் பட்டால் மற்றைய வன்னமிலங்கள் எவ்வாறு அரிப்படையச் செய்யுமோ அவ்வாறே இதுவும் அரிக்கும். எனினும் ஏனைய வன்னமிலங்களோடு இது கலக்கப்பட்டால் இதன் அமில இயல்பு குறைவடைந்து கார இயல்பு வெளிப்படுத்தும். உதாரணமாக சல்பூரிக் அமிலத்தோடு கலக்கப்பட்டால் இதன் கார இயல்பே வெளிப்படுத்தப்படும்.

நைத்திரிக் அமிலம் வன்னமிலம் என்பதாலும், வலிமையான ஒக்சியேற்றி என்பதாலும் இதனைக் கையாளும் போது அவதானமாகச் செயற்பட வேண்டும். உயிர்க் கலங்களில் பட்டால் அரிப்பை ஏற்படுத்திக் கலங்களைக் கொன்று விடும். உயிர்க்கலங்களிலுள்ள புரத மற்றும் இலிப்பிட்டுக் கூறுகளை நீரேற்றல் மூலம் பிரிகையடையச் செய்யும். எனவே இது மிகவும் ஆபத்தான வன்னமிலமாகும்.

சேதனச் சேர்மங்களுடன் மிக ஆபத்தான முறையில் வெடித்தலுடன் தாக்கமடைவதால் இதனை சேதனச் சேர்மங்களுக்கு அருகில் வைக்கக் கூடாது. பொதுவாக நைத்திரிக் அமிலம் ஆய்வுகூடங்களில் சேதனச் சேர்மங்களிலிருந்தும் காரங்களிலிருந்தும் சேய்மையில் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றது.

ஆனால் இந்த அமிலம் கெண்டைனர் கணக்கில் இலங்கை கடலில் கலந்திருக்கிறது உப்பு நீரில் கலந்திருக்கும் இதன் தன்மை கடலில் இருக்கும் உயிரினங்களையும் மனிதர்களையும் எந்தவகையில் அழிக்கப்போகிறது என்பதை நினைத்து பார்க்க முடியவில்லை.

இலங்கை கடற்பரப்பும் கடல் வளமும் இத்துடன் காணாமல் போகப்போகிறது என்பது மட்டும் பெரும் துயரமான செய்தி.

இரண்டு பெரிய நாடுகள் ஏற்க மறுத்த ஆபத்தை இலங்கை ஏற்க துணிந்தமை ஏன் என்கின்ற கேள்விகள் மிக சிக்கலானவை, இந்த மிகப்பெரும் அச்சுறுத்தலால் இலங்கையின் கரையோர மீனவர்கள் இலட்சக்கணக்கானவர்கள் சடுதியாக தொழிலை இழந்துள்ளனர்.

இலங்கையில் இருக்கும் கடல் வளம் என்பது மிக அரிதான வளமாகும் அவற்றின் பெறுமதிகள் உலகளவில் மிக மதிப்பானவை. இவற்றின் மூலம் பெறும் வருவாயையும் சூழல் நன்மைகளையும் இலங்கை வெறும் நஸ்டஈட்டின் மூலம் பெற்றுவிடுமா?

பலர் தமது காப்புறுதியை பெறுவதற்கும்,தமது உறவுகளின் காப்புறுதியை பெறுவதற்கும் அவர்களை கொலை செய்வதுபோல் இலங்கை அரசு தனது வளங்களையும் மக்களையும் பணயம் வைத்து நஷ்டஈடு என்கின்ற பணத்தை பெறுவதற்கு முயன்று அதில் வெற்றி கொண்டுள்ளதா என்கின்ற கேள்வி எழுகிறது.

தனது அரச ஆட்சியாளர்களின் சுகபோகங்களுக்கும் அவர்கள் பெற்ற கடனை அடைப்பதற்கு எந்த வழியிலும் தேவையான பணம் கிடைக்குமாயின் அவற்றை எந்தவகையிலும் பெறுவதற்கு இலங்கை அரசு தயாராக இருக்கின்றதா?

தன்னால் முடியாத ஒரு செயற்பாட்டை “குருவி தலையில் பனங்காயாய்” இலங்கை சுமக்க முன்வந்தமை எதற்காக ?

ஒரு பெரிய சுற்றுச்சூழல் பேரழிவின் காரண கர்த்தாவாக இலங்கை ஏன் செயற்பட துணிந்தது. பெரும் அச்சங்களுக்கு மத்தியில் நீருக்குள் மெல்ல மெல்ல கலந்து கொண்டிருக்கும் எண்ணெய் மற்றும் இரசாயண மாசு இலங்கை தீவு முழுவதையும் ஆக்கிரமித்துள்ளது. இந்தக் கப்பல் முழுமையாக மூழ்கி கப்பலில் இருக்கும் 325 மெட்ரிக் டன் எரிபொருள்களும் கடலில் கலந்து, கடல் வாழ் உயிரினங்களின் சூழலியல் வாழ்வாதாரத்தை மொத்தமாக சேதப்படுத்தி விட்டுள்ளது. இலங்கையின் கரையோரம் முழுவதும் நீர்வாழ் உயிரினங்கள், அரிய கடல் உயிர்கள் அனைத்தும் இறந்து மிதக்கின்றன, கரையொதுங்குகின்றன.

இலங்கையின் நீர்கொழும்பு பகுதி அழகிய கடற்கரைகளுடன் கூடிய பிரபல சுற்றுலா தளம் மட்டுமன்றி, பெருமளவான மீனவர்கள் வாழும் பெரிய மீன்பிடி பகுதியாகும். எனவே இந்த தீ விபத்து கடல் வாழ் உயிரினங்களை மாத்திரமன்றி மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் கேள்விக்குறியாக மாற்றியுள்ளது.

ஏதோ ஒரு இடத்தில் நிகழும் சிறு தவறு, எங்கோ ஒரு இடத்தில் காட்டப்படும் சிறு அலட்சியம் எவ்வளவு பெரிய விளைவை ஏற்படுத்துகிறது என்பது இன்னொரு முறை நிரூபிக்கப்பட்டுள்ளது,

-ப்ரியமதா பயஸ்-

## EM i Fotball 2021 – Første runde




EM i fotball 2021 startet 11. juni og første runde er spilt ferdig.

Åpningskampen ble spilt mellom Italia og Tyrkia i Roma hvor Italia vant 3-0.

Blant de seks gruppene er det en gruppe som skiller seg spesielt ut, gruppe F. Gruppen F består av Frankrike, Portugal og Tyskland som er land med stor sjanse til å vinne mesterskapet. Gruppen blir også kalt «dødens gruppe». Første kamp i gruppen ble spilt mellom Portugal og Ungarn der Portugal vant 3-0, hvor Cristiano Ronaldo scoret to mål og Raphael Guerreiro scoret ett. Storkampen mellom Tyskland og Frankrike endte 0-1 til Frankrike med et selvmål fra Tysklands midtstopper, Mats Hummels.




Alt har ikke gått etter planen i mesterskapets første runde. I kampen mellom Danmark og Finland var det en hendelse som skremte og sjokkerte hele verden. Danmarks midtbanespiller samt nøkkelspiller Christian Eriksen kollapset tre minutter før pause. Eriksen fikk hjertekompresjoner på banen og etter 14 minutter med behandling ble han båret av banen og fraktet til sykehuset. Eriksen ba spillerne fullføre kampen som endte 0-1 til Finland. Eriksen er nå stabil og har det bra. Iván Duque Màrquez

## Copa America 2021

Akkurat som EM i fotball skulle Copa America også skje i 2020, men på grunn av Koronapandemien, ble arrangementet avlyst. Mesterskapet blir arrangert i Brasil fra 13.juni til 10. juli 2021. Turneringen var planlagt å gjennomføres fra 12.juni til 12.juli 2020 i Argentina og Colombia. Colombia ble fjernet som medarrangør 20. mai 2021 på grunn av protester mot president Iván Duque Màrquez, og Argentina ble deretter fjernet som arrangør 30. mai 2021 på grunn av Korona. Dette er 47. mesterskapet i Copa Americas historie. Selv om Australia og Qatar aldri har vært en del av mesterskapet, siden de ikke tilhører Amerika, fikk de i dette mesterskapet invitasjon til å delta. Det er til sammen 12 lag som deltar i turneringen som holdes i Brasil. Disse lagene er delt inn i to grupper, gruppe A og gruppe B. Finalen vil spilles 10. juli 2021.

# கம்பிவேலிகளுக்குள் கடலும் தீவுகளும்




-தமயந்தி-

கடல்வளத்தைச் செம்மைப் படுத்தி மீட்டுருவாக்கம் செய்யவும், மீன் வளங்களைப் பெருக்கவும் என்ற தோரணையில், பாவனைகொவ்வாத பேருந்துக் கோதுகளையும், கைவிடப்பட்ட இரயில்ப் பெட்டிகளையும் வடகடலில் அமிழ்த்தும் பணியை இலங்கைக் கடற்தொழிலமைச்சு முன்னெடுத்து வருகின்றது. இவை தொடர்பாக இன்று எழுந்துள்ள எதிர்ப்புகளும், ஆதரவுகளும் என அவரவர் தம்மிடம் இருக்கின்ற தத்துவார்த்தக் கோட்பாட்டு அடிப்படையிலும், இல்லாத கோட்பாட்டு அடிப்படைகளிலும், சக்திக்கேற்பவும், சக்திக்கு மீறியும், அளவுக்கு மீறியும் கருத்துக்களை வெளியிட்டபடியே இருக்கிறார்கள்.



நமது பாரம்பரிய தமிழரசியல் விருப்பு வெறுப்புகள் என்பது சமூகநலன் சார்ந்ததாகவோ, நாட்டின் மேம்பாடுகள், அபிவிருத்திகள் சார்ந்ததாகவோ இருந்து வருந்திருக்கிறதென்பது மிகமிகக் குறைவானதே. எமக்கு உவப்பான அரசியல்வாதி அல்லது கட்சி எதைச் சொன்னாலும், செய்தாலும் கண்களை இறுக மூடிக்கொண்டு அப்படியே ஏற்பதும், அதைப் பிரச்சாரங்களால் பிம்பங்கள் கட்டுவதும், எமக்கு உவப்பில்லாத அரசியல்வாதி அல்லது கட்சி எதைச் சொன்னாலும், செய்தாலும் சடனாக எதிர்ப்புக் காட்டுவதும், எதிர்ப் பிரச்சாரங்கள் செய்வதும் சாதாரணமாக நடந்துகொண்டிருக்கும் ஒரு அரசியல் வறுமைதான்.

இந்த ஆதரவு, எதிர்ப்பு மரபின் வழியேதான் மேற்படி நடவடிக்கை பற்றிய ஆதரவுப் பிரச்சாரங்களும், எதிர்ப்புப் பிரச்சாரங்களும் வகை தொகையின்றிப் பொதுவெளி ஊடகங்களில் நடந்து கொண்டிருக்கின்றன.

மேற்படி நடவடிக்கையை இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கடல்வள ஆய்வு நிறுவனங்களின் ஆலோசனையின் பெயரிலேயே கடற்தொழில் அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நடவடிக்கையால் நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும் என்பது கடற்தொழில் அமைச்சின் நம்பிக்கை. நல்லது நடக்கும் என்ற நம்பிகையிலேயே இந்தத் திட்டம் மேற்கொள்ளப் படுகிறது.

அதேவேளை இந்தக் கடல்வள ஆய்வு மையங்கள் இப்படியொரு ஆலோசனையை முன்வைத்தது எவ்வகையான ஆய்வுகளை முன்நிறுத்தின என்பது குழப்பமானதுதான். தனிப்பட்டமுறையில் எனது கருத்து இவ்வகைச் செயற்பாடு எக்காரணம் கொண்டும் கடலுக்கு ஒவ்வாது என்பதுதான். தவிரவும் இந்தக் கடல்வள ஆய்வு நிறுவனங்கள் சொல்வதுபோல் பெருமெடுப்பில் நன்மைகள் எதுவும் நிகழப் போவதுமில்லை, இந்த நடவடிக்கையால் கடலில் மகாகேடுகள் நேரப் போகின்றன என எதிர்ப்போர் சொல்வதுபோலவும் பெருமெடுப்பில் தீயனவும் உருவாகப் போவதில்லை. இதைவிடப் பல்லாயிரம் மடங்கு அதிகமான தீயனவற்றை நாம் எந்தவித குற்ற உணர்வுமில்லாமலும், கூச்சமில்லாமலும் கடலுக்குச் செய்துகொண்டே இருக்கிறோம்.

1980ஆம் ஆண்டு ஊர்காவற்துறையிலிருந்து அனலைதீவுக்குப் படகில் ஏற்றிச் செல்லப்பட்ட ஒரு உழவுயந்திரத்தின் முள்ளுக்கலப்பை, அலையில் படகு ஆட்டம் கண்டதால் நடுக்கடலில் தவறி விழுந்தது. அந்தக் கலப்பை இப்போதும் அந்தப் பகுதி கடலடியிற்தான் கிடக்கிறது. மூன்று வருடங்களுக்கு முன்னும் அதனைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதில் எந்தவித பாசியும் வளரவில்லை, எந்தவித மீனும் குடியமரவுமில்லை, எந்தக் கணவாயும் வந்து முட்டையிடவுமில்லை.

இதேபோல் 1968-70களில் பாலைதீவுக் கப்பல் பள்ளத்தாக்கில் தரித்து நின்ற வெளிநாட்டுக் கப்பலொன்றின் நங்கூரம் பாறையில் சிக்கியதால் அப்படியே கை விட்டு விட்டார்கள். அதுவும் அந்தப்படிக்கேதான் கிடக்கிறது. இவைபோன்ற பல நேரடி அனுபவங்களை நமது சுழியோடி மீனவர்களால் சொல்ல முடியும்.

இந்த இரும்புகள் அலுமினியங்கள் மட்டுமல்ல, எந்த உலோகத்தைக் கடலில் கொட்டினாலும் கடற்சூழல் மாசடையும் என்பது சாதாரணமாகவே புரிந்து கொள்ளக் கூடியது. இதேவேளை, குறிப்பாக யாழ்நகரத்தில் மட்டும் ஒரு நாளைக்கு விட்டெறியப்படும் பிளாஸ்டிக், பொலித்தீன் நஞ்சுகள் அப்படியே சென்று குருநகர், கொட்டடிப் பகுதிக் கடலில்தான் சென்று சேர்கின்றன.

2017ஆம் ஆண்டு குருநகர் பகுதியை சில விநாடிகளிலான வீடீயோ ஆவணமாகத் தயாரித்துக்கூட வெளியிட்டேன்.





சுற்றுப்புறச்சூழல் பற்றி முகநூலில் புரட்சி செய்பவர்கள் யாருமே அதனைக் கண்டு கொள்ளவில்லை. அதன்பின் இளம் புகைப்படக் கலைஞர் திலக்ஸன் இவை பற்றிய விழிப்புணர்வை ஊட்டும் வகையில் ஒரு புகைப்படக் கண்காட்சியைக்கூட தனது தனிப்பட்ட செலவில் குருநகர் மீன் சந்தையில் நிகழ்த்தினார். இப்போ பஸ் பற்றிக் கூப்பாடு போடுபவர்கள் எல்லாருமே இவற்றையெல்லாம் கண்டுகொள்ளாமல்க் கடந்து போனவர்கள்தாம்.

கடற்தொழில் அமைச்சு இந்தப் பாவனைக்கொப்பாத பஸ்களைக் கடலில் இறக்கியபோது "இது தகாது" என முதலில் குரல் உயர்த்தியதும் நான் தான். எனது விசனத்தைப் பல பதிவுகளின் ஊடாகத் தெருவித்திருந்தேன். பல நண்பர்கள் எனது உட்பெட்டியில் வந்து "இந்த நடவடிக்கை சரியானதா?" என்று கேட்டபோதும் "சரி அல்ல" என்றுதான் சொன்னேன்.

அதேவேளை, பேராசிரியர் அம்ரிதா ஏயெம் அவர்களும், சமூக ஆய்வாளர் நியூட்டன் அவர்களும் குறிப்பிடுவதுபோல், இதன் நன்மை தீமை அளவீடுகள் பற்றிய பகுத்தாய்வைத்தான் நாம் கணக்கில் எடுக்க வேண்டும்.

அதன் அடிப்படையில் முன்மொழியப் பட்டதே "இந்திய இழுவைப் படகுகள்" வந்து தமது நாசகாரத் தொழிலை மேற்கொள்ளும் இடங்களில் இவற்றைப் போட்டு விடுவோமானால் அவர்களால் இழுவைமடியைக் கடலில் இறக்கவே முடியாது. அப்படி இறக்கினால் இழுவைமடிகளை இந்த பஸ்களுக்கு இரை கொடுத்துவிட்டு மிகப்பெரும் இழப்பைச் சந்திப்பார்கள். இதனால் இந்தப் பக்கங்களுக்கு வருவதை நிறுத்தி விடுவார்கள். எமது கடல் வளங்கள் பாதுகாக்கப் படுவதோடு, மீன் வளங்களின் வரவும் பெருக்கமும் மிகவும் அதிக அளவிலாக கடுகதியாகவே உருவாகும்.
இந்த இரும்புகள் அலுமினியங்கள் மட்டுமல்ல, எந்த உலோகத்தைக் கடலில்




கொட்டினாலும் கடற்சூழல் மாசடையும்தான். ஆனால், இது ஒரு அரசுத்துறை, அதிகாரம் சார்ந்ததென்பதாலும், தமது அரசியலுக்கு இணக்கமில்லாத தரப்பாரின் செயற்பாடுகள் என்பதாலும்தான் சிலர் எதிர்வினை செய்கிறார்கள். இது நான் மேலே குறிப்பிட்டதுபோல சமூக நன்மை தீமைகளைக் கரிசனைக்கெடுத்து, ஆய்வுரீதியாகப் பார்க்காமல் எழுந்தமானமாகக் காட்டும் எதிர்ப்பு மட்டுமே.

மேற்படி கடற்தொழில் அமைச்சின் வடபகுதிக் கடல் நடவடிக்கைகள் பற்றிய கட்டுரைகளை எழுதிக்கொண்டிருக்கும் சமூகவியல் ஆய்வாளர் நியூட்டன் மரியநாயகம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் அம்ரிதா ஏயெம் ஆகி-யோரது ஆய்வுக் குறிப்புகள் கவனத்துக்குரியவைகளாகும். இதில் விரிவுரையாளர் அம்ரிதா ஏயெம் அவர்களின் கட்டுரையைச் சிலர் தமக்கு உவப்பான தலைப்புக்களை மாற்றி, தமக்குத் தேவையான பிரச்சாரங்களைச் செய்வதையும் மிகவும் விசனத்தோடு அவதானிக்க முடிகிறது.


நியூட்டனின் கட்டுரையிலிருந்து:
"நியூயோர்க், 70-80ஆம் ஆண்டு காலக்கட்டத்தில் உலகத்திலேயே பெரிய அளவிலான குப்பைகளை உருவாக்கும் நகரமாக இருந்து வந்தது. குப்பைகளை அகற்ற நிலத்தில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டதனால், கடலில் குப்பைகள் மற்றும் கழிவுகளை அகற்றி வந்தது.
80-களின் இறுதியில் இது பாரிய கடல்சார் சூழல் பிரச்சனையை ஏற்படுத்தியது. சூழலியல் மற்றும் மீனவ செயற்பாட்டாளர்களின் போராட்டத்தினால் மத்திய அரசு குப்பை கிடங்காக கடலை உபயோகிப்பதனைத் தடுத்து நிறுத்தியது. அப்படியிருந்தும் சட்டத்தின் சில ஓட்டைகளைப் பயன்படுத்தி 2010 வரை, கடலடித்தள சூழலை மேம்படுத்துகிறோம் என்று கூறிக்கொண்டு, வேறுவகையில் அகற்றுவதற்கு பலகோடி டொலர்கள் செலவை ஏற்படுத்தும் என கணிக்கப்பட்ட ரயில் பெட்டிகளை- பெரிய செலவுகள் எதுவுமில்லாமல் கடலில் போட்டது நியூயோர் மற்றும் சில மாநில அரசுகள். தற்போது செய்யப்பட்டுள்ள ஆய்வுகளின் அடிப்படையில், போராட்டக்காரர்கள் கூறியதுபோல கடலிலிட்ட அப்பெட்டிகள் பெரிய அளவில் கடலடித்தளத்தில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

அதேவேளை, அவற்றைக் கடலிலிட்ட மாநில அரசுகள் கூறியது போல ரயில் பெட்டிகள் கடலுக்கோ அதன் உயிரிகளுக்கோ அல்லது மீனவர்களுக்கோ பெரிய நன்மை எதையும் தந்துவிடவில்லை."

அம்ரிதா ஏயெம் இன் கட்டுரையிலிருந்து:-
"பொதுவாக, கழிக்கப்பட்ட பொருட்களை கடலில் வீசுவது நல்லதல்ல. குறிப்பாக உலே-ாகப் பொருட்கள், இவை கடலில் கரையக்கூடியன. பாரமான உலோகங்கள், அவற்றின் நியம அளவை?வட கடற்சூழற்றொகுதியில் அதிகரிக்கும்போது, உணவுச் சங்கிலிகளின் மூலம், மனிதர்களையும், மற்றைய விலங்குகளையும் அடைந்து, அவர்களின் ஆரோக்கியத்திற்கு தீமை விளைவிக்கும். ஆனால் நன்மைகளையும், தீமைகளையும் ஒப்பிடும்போது, இங்கே நன்மைகளின் அளவு அதிகரிக்க வேண்டுமானால், கடலில் வாகனங்கள் அமிழ்த்தப்படுவதற்கு முன், அந்த வாகனங்களிலுள்ள, பொலித்தீன், பிளாஸ்ரிக்கிலான சக்கரங்கள் (டயர்கள்), இருக்கைகள், மேலுறைகள், பட்டிகள் போன்றவை கவனமாக அகற்றப்பட வேண்டும். அத்துடன் தீங்கு செய்யக்கூடிய உலோகங்களும் அகற்றப்பட்டு, துப்பரவு செய்யப்பட்டு, கடல்சார் உயிரியல் காரணிகள் கவனத்திற்கொள்ளப்பட்ட பின்னர், உலோகக்கூடாகவே கடலில் போடப்படவேண்டும்."

இன்னொரு புறம், வடபகுதிக் கடலில் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கையை மிகவும் காட்டமாக எதிர்க்கிறார்கள் தமிழ்நாட்டிலிருந்து. இவர்கள் இதனை எதிர்ப்பதற்கான காரணம் மிக இலகுவானது. அதாவது இந்திய தமிழ் முதலாளிகளின் நாசகாரத் தொழிலான இழுவைப் படகுகளைக் கொண்டு இனிமேல் இங்கு வரமுடியாமற் போகும் என்பதே. கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக இயவர்கள் எங்கள் கடல் வளங்களுக்கும், மீனவர்களுக்கும் செய்துவந்த அட்டூழியங்களும், நாசங்களும் கொஞ்சமல்ல.

இந்த இந்திய நாசகார இழுவைப் படகுகள் தமிழகக் கரைகளிலிருந்து எமது எல்லைகளுக்குள் அத்துமீறி நுழையும் வழித் தடங்களே கீழேயுள்ள வரைபடத்தில் காட்டப் பட்டுள்ளதாகும்.




மேற்படி கடற்தொழில் அமைச்சின் இந்த நடவடிக்கையால் ஏற்படப்போகும் ஒரே நன்மையென்பது, இந்த நாசகாரத் தொழில்களை மேற்கொள்ளும் கடற்தடங்களில் இந்தப் பஸ்களை அமிழ்த்தி விடுவதுதான். பலவிதமான தரப்பாரும், பல்வேறு சந்திப்புக்களையும், பேச்சுவார்த்தைகளையும் நடத்தி முடித்தும் தீர்வு காண முடியாமற்போன இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலுக்கும், சட்டவிரோதத் தொழிலுக்கும் முற்றுப்புள்ள வைக்கும் நடவடிக்கையாக இது அமையும்.



இந்த இழுவைப் படகுகளின் வருகை நிறுத்தப்பட்டு, கடல்வளச் சீரழிவுகள் தடுக்கப்படுமாயின் எமது கடலும், கடல் வளங்களும் பாதுகாக்கப்படும்.
மீன்வளம் சடுதியாகவே பெருகும்.
எமது மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கு இது மிகப்பெரும் பெறுபேறாக இருக்கும்.
இவை மட்டுமல்லாது இலங்கையின் கடல்ப்பொருளாதாரம் காப்பாற்றப் படுவதோடு, மேம்படுத்தப் படும் என்பது மறுக்க முடியாத உண்மை.

இதற்கு நல்லதொரு சான்றாக இந்தக் கொரோணா காலம் எமக்கு நிகழ்திக் காட்டியது.

கடந்த ஒருவருடத்துக்கும் மேலாக குரோனா காரணமாக இந்திய இழுவைப் படகு-களின் வரத்து எமது கடல் எல்லைக்குள் இல்லாமற் போனதால் வழமைக்கு மாறாக புறங்கடல் மீன்களின் வரத்து மிகவும் அதிகமாக காணப் படுகிறது.
இந்த மீன் கிளைகளை வேட்டையாடுவதற்கென்றே திமிங்கிலங்களும் உள்க்கடலுக்கு வந்து போகின்றன என்பதை அவதானிக்க முடிகிறது.
கடந்தசில தினங்களுக்குமுன் மெலிஞ்சிமுனை பிரண்டையாற்றுப் பகுதிக்கு இரண்டு திமிங்கிலங்கள் வந்து தரை தட்டியதை அறிந்திருப்போம். ஆக, எமது கடல் வளங்கள் அழிக்கப் படுவதற்கும்,
ஆக, எமது கடற்பரப்பில் மீன்பிடித்தொழில் முடக்கப்படுவதற்கும், பிரதான காரணியாக இந்திய இழுவைப் படகுகளின் நாசகாரத் தொழில்களே இருந்து வருகின்றன.




### Hvorfor bør jeg vaksinere meg?

Tar du vaksinen, har du liten sannsynlighet for å bli syk. Skulle du likevel bli syk, vil du få et mildere sykdomsforløp. For samfunnet er den største gevinsten at presset på helsevesenet reduseres når færre blir syke. På sikt vil vaksineringen føre til at vi kan gjenåpne samfunnet og leve mer som normalt igjen.

### Svært få fullvaksinerte får korona

Per 9. mai viser data fra FHI at kun 1 av 2000 (0,05 %) av fullvaksinerte personer i Norge har fått koronavirus.

Hvordan foregår vaksineringen?

Vaksinen settes i overarmen. Før vaksinasjon vil du bli spurt om du er frisk, og om du har hatt reaksjoner på andre vaksiner tidligere. Husk å informere dersom du har allergi, bruker medisiner eller har andre helseproblemer.

Det er vanlig å utsette vaksinasjon ved akutt sykdom og ved feber over 38 grader. Etter vaksinasjon blir du bedt om å vente i minst 20 minutter i tilfelle allergiske reaksjoner.

### Bivirkninger av vaksinen

Alle vaksiner har bivirkninger (uønskede effekter), men de fleste er milde og forbigående. Vanligvis oppstår disse de første dagene etter vaksinasjon, og går over i løpet av et par dager.

- Smerter på stikkstedet er vanlig.
- Andre vanlige bivirkninger er tretthet, hodepine, muskelsmerter, frysninger, leddsmerter, kvalme, ømme lymfeknuter og feber. Disse bivirkningene er vanligere etter dose to (Pfizer/BioNTech og Moderna). For AstraZeneca-vaksinen er bivirkningene mildere og sjeldnere etter dose to.
- Bivirkninger er sjeldnere blant eldre enn hos yngre voksne.

Sjeldne bivirkninger eller bivirkninger som først kommer til syne lang tid etter vaksinering kan ikke utelukkes.

### Alvorligere bivirkninger

Opplever du uventede, kraftige eller langvarige symptomer som du tror skyldes vaksinen, bør du kontakte lege eller annet helsepersonell. De plikter å melde fra om alvorlige eller ukjente reaksjoner som de mistenker skyldes vaksine. Du kan også selv sende inn melding via helsenorge.no Legemiddelverket og FHI overvåker bivirkningene av koronavaksinen nøye.

### Sykdom etter vaksinering

Hvis du etter vaksinering får symptomer som hoste, sår hals, rennende nese, tung pust og tap av smak/luktesansen bør du holde deg hjemme og teste deg for koronavirus. Dette er symptomer som ikke er typiske for vaksinasjonsbivirkning.

Vaksinering av spesielle grupper

### Personer som har hatt covid-19

Det er ennå ikke klart hvor lenge beskyttelsen av det å ha gjennomgått covid-19 varer. Det anbefales derfor at personer som tidligere har hatt sykdommen og som er i de prioriterte gruppene, også vaksinerer seg – så lenge formen er god og man er frisk igjen på vaksinasjonstidspunktet.

- Personer som har hatt covid-19 trenger bare én vaksinedose.
- Det anbefales at vaksinen gis tidligst 3 måneder etter at man er blitt frisk.

Dersom du har hatt covid-19 og blir kalt inn til vaksinasjon, så si ifra til vaksinasjonsstedet så de kan ta hensyn til det i planleggingen.

### Vaksinasjonskort og koronasertifikat

Etter vaksinering vil opplysningene være tilgjengelig på din profil på helsenorge.no, under emnet "vaksiner".

På helsenorge.no får du også tilgang til koronasertifikatet ditt. Sertifikatet dokumenterer vaksinestatus, negativt testresultat og om du har gjennomgått covid-19. Det skal bidra til gjenåpning av samfunnet. Regjeringen jobber fortstat med hva koronasertifikatet kan benyttes til i Norge eller ved innreise til landet.Les mer om koronasertifikatet hos FHI

https://www.bergen.kommune.no

**Radio Tamil Bergen Then Tamil Osai**
Organisasjonsnummer: 980305414

Norway Radio Tamil

**தேன் தமிழ் ஓசை**

**30 ஆண்டுகள் நெடும்பயணம்**

Ansvarlig redaktør: Julius Antonipillai
Adresse: Krohnegården 5b, 5146 Fyllingsdalen.

Telefon: 924 636 74
E-Post: ttoosai@gmail.com / antonipillai@hotmail.com

# ஹம்சத்வனி கவிதைகள்

சூரியனார் பொன்னொளிரும்
கடல்வயற்பரப்பில்
பாத்திகட்டி காத்திருக்கும் வாழ்க்கை.
நம்பிக்கையும்
ஏமாற்றங்களுமாய்,
நகரும் பொழுதுகளில்
நாகதாளியின் முட்களாய்
உறுத்தும் நினைவுகளை
உதறிவிட்டேன்.



வானும் கடலும் பொன்நிறத்தில்
சேதி சொல்லும்
நம்பு
வாழ்க்கை சிக்கும் என
களங்கட்டிகள் கதை சொல்லும்
விளைச்சல் பொய்த்துப்போகும்
விவசாயம் இது வெனிலும்,
கவலையில்லை.
நாளை எழுவேன்
சூரியர் போல்
கடலும் மனமும்
பொன்னிறத்து தகடாகும்.

## ஈர மணலில்



ஒலி உறங்கிக்கிடக்கிறது.
அசைவற்ற பாதங்களில்
சலங்கையும் வாழ்வும் சிலம்பவில்லை.

சொல்ல மறந்த கதைகள்
மௌனமாய் காற்றில் கரையும்
ரணத்தின் வேளையிது

அப்பனுக்கும் அப்பன்
அவனுக்கும் முற்பட்ட முப்பாட்டன்
ஆடிய கூத்தும் அதன் முறையும்
காற்றில் உலவுது

வயல் மேட்டில்,
கடலின் மணற் பரப்பில்
மத்தளத்தை அடிக்கவொரு
கையுடையோன் இங்கு வேண்டும்.

கால்கள்
அசைவற்று சூழ்ந்து நிற்கிறது.

மனத்தில் ஒரு பெருங்கனம்
கல்லாய் கிடக்கிறது.
தாளத்தை எடுத்தொரு கை தட்டும்
நான் உயிர் பெறுவேன்.
சலங்கையுடன் பாதங்கள்
காத்திருக்கு மணற்பரப்பில்.

## கனவுகளை விதைக்காதீர்

என் கன்னத்தில் தெறிக்கின்ற
ஒளியைபோல்,
உள்ளதை உள்ளபடி பார்த்து
வாழ்ததுடிக்கும் விழியுடையேன்.


பொய்யை புளுகுகளை
கதையாய் என்
காதுகளில் ஓதாதீர்
பறவைகளின் ஒலியுகலூடன்
கலந்திருக்க விளைகிறேன்

எங்கு போடினும்
முளைக்கும் நல்விதை நான்
போலியில்லை.
நான் மானுடத்தின் நம்பிக்கை.

புன்னகைக்க கற்றுக்கொள்ளும்
நேரமிது.
தயங்காதீர்.



## இருள் நிறைத்து அலகோடு



நிழலை மோகித்து காத்திருக்கிறேன்
வயிற்றைப்போல்
கடலும் வெறுமையாச்சு.
கனவு மீன்கள் எங்கே?
அலையேறிப் போயினவா,
கடல்மடியோடு அள்ளுண்டே போயினவா?

குஞ்சு நண்டு கூட
குறுக்கிடவில்லை பார்.
அசையாமல் நீரின் அசைவினை
நோக்கியே விழி எறிந்தேன்
வழியேதும் தெரியவில்லை
வாய்க்கேதும் கிட்டவில்லை.
ஆனாலும்
கடல்போலும் நம்பிக்கையுடையேன்.
நான் நகரேன்,
எனது கடல்
எனது நிலம்
எனது வான்

மீன்கள் வரும்.

கவிதைகள்: ஹம்சத்வனி (கனடா) - படங்கள்: தமயந்தி (நோர்வே)




பயணத்தின் அனுபவங்களையும், அதிர்வுகளையும் சேகரித்து வைப்பதே இதுவரை எனது வைப்பில் இருக்கும் மிகப்பெரும் சொத்துக்கள்.

முதன் முதலாக எகிப்து பற்றி அறிமுகமாகும் போது எனக்குப் பத்து வயது. ஐந்தாம் வகுப்பில் ஆசிரியர் சொல்லித்தந்த வரலாற்றுப் பாடத்தில் தான் எகிப்து பற்றியும் உலகின் முதல் சமூகம் வாழ்ந்து பயிர்த்தொழில் செய்யத் தொடங்கிய இடத்தைப் பற்றியும் தெரிந்து கொண்டேன். அப்போதே அந்த இடங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது.

2018இல் எகிப்துக்குச் செல்லும் வாய்ப்பு கிடைத்தது. அதுவும் எகிப்தின் உயர்ந்த பிரமிட் தொகுதியான புணைய பிரமிட்டின் அழகினைப் பார்த்தபடி இருக்கும் ஒரு அறையும் கட்டிலும் கிடைக்கப் பெற்றது இரட்டிப்பு மகிழ்ச்சி.

## பெரிய பிரமிடு (The great pyramid)

எகிப்தில், முதல்நாளிரவு, விடுதியின் மொட்டைமாடியில் அமர்ந்து உணவருந்தியபடியே பிரமிடின் ஒளிநடனத்தை பார்ப்பது பேரானந்தம். நாள்தோறும் இரவில் ஒளிப்பாய்ச்சலும், ஒலி வடிவிலான கதை சொல்லலும் ஒளி-ஒலி நிகழ்வாக அங்கு நடைபெறுகிறது.



எகிப்தில் காணக் கிடைக்கும் நூற்றுக்கணக்கான பிரமிடுகளில் கீசாவில் இருக்கும் பிரமிட் தொகுதியில் “பாரோ கூபு” பிரமிடு அங்குள்ளவற்றில் அளவில் பெரியது.

கிசா நகரமும் பிரமிடுகளின் தொகுதியோடு தொடங்கும் பாலைவனமும் ஒரு கோடாகப் பிரிக்கப்பட்டிருப்பதை நாம் பிரமிடின் அருகில் நின்று பார்க்கும் போது காண முடியும். அங்கு நின்ற நாட்களில் அந்தக் காட்சியைப் பலமுறை பார்த்துப் பார்த்து ரசித்திருக்கிறேன்.

பிரமிடுகளை அருகில் பார்ப்பது ஒரு அனுபவம் என்றால், தூரத்திலிருந்து அவைகளைச் சுற்றி வட்டமிட்டுப் பார்ப்பது வேறோர் அனுபவம். ஒட்டகங்களின் மீதேறி பிரமிட்டைச் சுற்றி பெரிதாய் ஒரு ஆலவட்டமிட்டுக் காட்டுவதற்கென்றே ஒட்டகக்காரர்கள் இருக்கிறார்கள். அத்தகைய ஒட்டகச் சவாரியின் போது மஞ்சள் பாலை மணலுக்கும் நீல வானத்திற்குமிடையில் உயர்ந்து நிற்கும் பிரமிடுகளின் காட்சி அத்தனை அழகாகத் தோற்றமளிக்கும்.



பிரமிடுகளைப் பக்கத்திலிருந்து பார்க்கும் போது அதன் பிரம்மாண்டம் பார்க்கும் யாவரையும் பிரமிக்க வைக்கும் என்பதில் எந்த ஐயமுமில்லை. ஆனாலும் ஒருநாள் முழுவதும் பிரமிடின் தூரத்துத் தரிசனத்திற்கு மட்டுமே செலவிட வேண்டும். முதலிலேயே அருகில் போய்ப் பார்த்து அதன் காட்சி அனுபவத்தைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது.

4500 வருடங்களுக்கு முன் மக்கள் இத்தனை பிரம்மாண்டமான பிரமிடுகளை எப்படிக் கட்டினர்? பிரமிடுகள் கட்டப் பயன்படுத்தப்பட்ட பாறைகள் ஒவ்வொன்றும் பல டன்கள் எடையுள்ளவை. பாறைகளில் மேற்புறத்தில் சுண்ணக் கற்களால் பளிங்கு போல காணப்படும் கற்கள் இன்று சிதைந்துவிட்ட நிலையில் உச்சிப் பகுதியில் மட்டும் சில எஞ்சியிருக்கின்றன. பாறைகளை ஏற்றிவந்த கப்பல் பற்றிய தகவல்களோடு சிறு அருங்காட்சியகம் ஒன்று அங்கேயே உள்ளது.

எகிப்தின் மிகப்பெரிய பிரமிடுகளில் ஒன்றான கூபு மற்றும் காப்ராவின் பிரமிடுக்குள் நுழைவதற்கான நுழைவுச் சீட்டைப் பெற்றுக் கொண்டேன். பொ.ஆ.மு 2250இல் கட்டப்பட்ட இந்தப் பெரிய பிரமிடு ஏறத்தாழ 4250 ஆண்டுகள் தொன்மையுடையது. ஒவ்வொரு பிரமிடுகளுக்கு உள்ளும் நாம் நுழைந்து பார்க்க முடியும். ஒருவர் மட்டுமே நுழையக் கூடிய வாயில். உள்ளே பாறைகளைக் குடைந்தெடுத்து மேல்நோக்கி நகரும் படிக்கட்டுக்கள் இருக்கின்றன. சில இடங்களில் பலகைப் படிகள் உள்ளன. பாதி தூரம் நாம் குனிந்த படியேதான் செல்ல முடியும். ஒருவகை இடுக்கமான பாதை. மூச்சு முட்டுவது போல இருக்கும்.

பிரமிடின் உச்சி நோக்கி ஓரளவு தூரம் சென்ற பின் ஒரு இருட்டான அறை

காணப்படுகிறது. அறையின் நடுவே பாறையில் குடைந்தெடுக்கப்பட்ட சமாதி ஒன்று இருந்தது. தற்போது அது ஒரு குளியல் தொட்டிபோல திறந்தபடி காட்சியளித்தது. இங்கே தான் “பாரோ கூபு”வினது உடல் அடக்கம் செய்யப்பட்டிருந்தது.



பிரமிடினுள் உள்நுழைந்து சமாதி வரையிலான பயண அனுபவம் என்றும் நினைவில் நிற்கக் கூடிய ஒன்று. அடுத்ததாக பிரமிட் அருகில் இருக்கும் உணவு விடுதிகளும் அதன் மொட்டை மாடிகளுமாகும். மாலை நேரங்களில் மொட்டை மாடியில் அமர்ந்து தேநீர் குடித்தபடி பிரமிடுகளைப் பார்த்து கொண்டிருப்பது அத்தனை புத்துணர்வு தருவதாக இருந்ததால் அநேகமாக மாலை நேரங்களில் அங்கு அமர்வது எனக்கு வழக்கமாகிப் போனது.



## நைல் நதி

உலகின் மிக நீளமான நதியான நைல் நதி கீசாவிலிருந்து சிறு தொலைவில்தான் இருக்கிறது. பத்திற்கும் மேற்பட்ட நாடுகளின் ஊடாகப் பாயும் நதியில் பயணம் செய்வதற்கென்றே அழகிய சிறிய படகுகள் விடப்படுகின்றன. எகிப்திய மொழியில் நைல் நதியின் பெயர் “இடுரு” என்று படகோட்டி சொன்னார்.

சூடான் முதல் எகிப்து வரையிலான நதியில் சில மணிநேரம் பயணம் செய்யலாம். நைல் நதியில் கால் நனைத்தபடி படகில் செல்லும் போது எனது ஐந்தாம் வகுப்பு வரலாற்று ஆசிரியையும் எனது சினேகிதியும் நினைவில் வந்து புன்னகைத்துக் கொண்டிருந்தார்கள்.

பண்டைய எகிப்தின் நகர நாகரிகத்தின் முக்கிய நீர்வழிச் சாலையைக் கண்டதில் கிடைத்த மகிழ்ச்சியோடும், இருகரையும் நகரம் இருக்க நடுவில் நைல் நதியின் போக்கில் பயணப்பட்ட மகிழ்சியோடும் ஒருநாள் கழிந்தது.

## இரவுச் சந்தை

எகிப்தின் பழைய நகரச் சந்தை (கடைத்தெரு) எகிப்தில் பிரபலமான ஒன்று.
ஒரு மாலை அங்கு சென்றமை நல்லதோர் பொழுதாக அமைந்தது. “கெய்ரோ - Cairo” செல்லும் சுற்றுலாப் பயணிகளை இங்கு காணமுடியும். பொ. ஆ. 1300 ஆண்டுகளில் கட்டப்பட்ட இத்தெருவும் விடுதிகளும் இன்றளவும் இருக்கின்றதே என்ற நினைவோடு அங்கே உலாவித் திரிவதே ஒரு போதை.



எகிப்திய ஆடைகள், அணிகலன்கள், விளக்குகள் என்று தெருக்கள் முழுவதும் நூற்றுக்கணக்கான கடைகளையும், பழைய நகரத்தையும் பார்க்க ஒரு நாள் போதாது. வாங்கி வந்த எகிப்திய அணிகலன்கள் பலவற்றை எனது நடன நாடகத்திற்கான ஒப்பனைக்குப் பாவித்திருக்கிறேன்.

எனது இந்தப் பயணம் அங்குள்ள பல மனிதர்களை அறிமுகப்படுத்தியது. எங்களுடைய சுற்றுலா வழிகாட்டி, பிரமிட் போஸ்டர்கள் விற்கும் ஒரு குட்டி எகிப்திய அழகி, ஒட்டகக்காரர் என்று இவர்கள் எல்லோரும் அவ்வப்போது எங்களோடு தேநீர் அருந்தும் நேரங்களில் இணைந்து கொள்வார்கள்.

விடுதியின் அருகில் வீடுகள், கழுதைகளில் ஏறிச் செல்லும் சிறுவர்கள். ஒட்டகக் கூடாரங்கள் என்று “கிசா” பிரமிடுகளைச் சார்ந்து வசிக்கும் மனிதர்கள் இன்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழே தான் இருக்கின்றனர்.


சுற்றுலா வழிகாட்டியின் அழைப்பின் பேரில் அவருடைய வீட்டிற்குச் சென்று ஒரு எகிப்திய வீட்டின் அமைப்பினையும் பார்த்தேன். இன்னும் பார்க்க எத்தனையோ பல இடங்கள் உண்டு. பிரமிடுகளின் வடிவங்களே பல வகையுண்டு.

நான் அங்கு சென்றது ஐந்து நாட்கள் மட்டும்தான். எகிப்தினை அனுபவிப்பதற்கு இந்த நாள்கள் போதுமா என்ன? நிச்சயம் போதவே போதாது.
எகிப்து போக விரும்புபவர்கள் எகிப்து பற்றிய நூல்களையும், Khartoum(1966) மற்றும் Cloepatra (1963) என்ற திரைப்படத்தையும் பார்த்து விட்டுச் செல்லவேண்டும்.

இப்சனின் பேர் கிந்த் கவிதை நாடகத்தில் ஒரு பாகம் முழுவதும் எகிப்தின் கெய்ரோ நகரத்தில் நடப்பவை. இப்சனின் கவிதை நாடகம் படித்த பாதிப்பு வேறுவிதமான மன அனுபவத்தினையும் எனக்குத் தந்து கொண்டிருந்தது. பாதி மனித உருவமும் பாதி மிருக உருவமும் கொண்ட ஸ்பிங்ஸ் (Sphinx) சிலை என்னுடனும் பேசுகிறதா என்று கொஞ்சம் பைத்தியகாரத்தனச் சிந்தனைகள் தோன்றி மறைந்தன.

பிரம்மாண்டம் என்பது இங்கு வெறும் வார்த்தை மட்டுமல்ல. மீண்டும் ஒருமுறை நான் எகிப்து போயாக வேண்டும்.





# அசாதாரண உலகில் சாதாரணமான வாழ்வு

**நவீனா லிமலநாதன்** ஒஸ்லோ, நோர்வே

திருநங்கையர், திருநம்பியர் என்னும் போது என்னையறியாமல் ஒரு பயவுணர்வு ஏற்படுவதுண்டு. ஆனாலும் என் ஆழ்மனம் என்னுடன் ஒப்பிடும்போது அவர்கள் எவ்விதத்திலும் குறைந்தவர்கள் அல்லவென கூறுவதையுணர்கின்றேன். அவர்களிடம் கடமை, கண்ணியம், கல்வி, கடின உழைப்புவென எல்லாமே என்னிலும் பார்க்க சற்று அதிகமாகவே உள்ளது. ஆனால் எனக்குச் சமூகத்தில் கிடைக்கும் அங்கீகாரம் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. அதாவது அவர்களது தனித்துவத்திற்கான அங்கீகாரம் சமூகத்தில் கிடைப்பதில்லை.

திருநங்கையர்கள் மற்றும் ஓரினச் சேர்க்கையாளர்களைப் பற்றி உரையாடிக் கொண்டிருக்கும் போது எனது பேரனார் தெரிவித்த ஒரு கூற்று எனது ஞாபகத்தில் இன்றும் உள்ளது. அவரது மதிப்பீட்டின்படி அவர்கள் அசாதாரணமானவர்கள். எனது பேரனார் மட்டுமன்றி பலர் மற்றையவர்களை அசாதாரணமானவர்களாக வரையறை செய்வதை அவதானித்திருக்கின்றேன். இங்கு சாதாரணம் என்றால் என்ன என்ற கேள்வி எழுகின்றது.




எனது நோர்வேஜிய நண்பர்களுக்கு தோல்நிறம் வெள்ளையாய் இருப்பது சாதாரணம். ஆனால், எனது தோலின் நிறம் கருமையாக இருப்பதே எனக்குச் சாதாரணம். தோலின் நிறம் எம்மிடமுள்ள பரம்பரைஅலகுகளால் தீர்மானிக்கப்படுகின்றது. இதில் தாழ்ந்தது, உயர்ந்தது என எதுவுமில்லை. நோர்வேயில் பெரும்பான்மையினரின் தோல்நிறம் வெள்ளை என்பதற்காக மற்றைய எல்லோரையும் அசாதாரணமானவர்கள் என்பதை நாம் ஏற்றுக்கொள்வோமா?

திருநங்கையர், திருநம்பியர்களுக்கு புறக்கணிக்கப்படுதல் என்பது ஒன்றும் புதிய விடயமல்ல. புறக்கணிக்கப்படுதல் என்பது குழந்தைப்பருவத்திலேயே ஆரம்பித்துவிடுகின்றது. அவர்களது குணாதிசயங்களும், பழக்கவளக்கங்களும் மற்றையவர்களிலும் பார்க்க வேறுபட்டிருக்கும் போது முதலில் இவர்களை துன்புறுத்துவதும், புறக்கணிப்பதும் சொந்தக் குடும்ப அங்கத்தவர்களே. தாம் மற்றவர்களிலும் பார்க்க வேறுபட்டிருப்பதற்கான காரணம்கூடத் தெரியாத வயதில் பாதுகாக்கப்பட வேண்டியவர்களாலேயே புறக்கணிக்கப்படுதல் என்பது எவ்வளவு கொடுமை.

விஞ்ஞானரீதியாக நோக்கினால் எமது பாலைத் தீர்மானிக்கும் பரம்பரை அலகுகள் தாயின் கருப்பையிலேயே தீர்மானிக்கப்பட்டுவிடுகின்றது. XX என்ற பரம்பரையலகு பெண் எனவும், XY என்ற பரம்பரையலகு ஆண் எனவும் எமது பாலைத் தீர்மானிக்கிறது. ஆயினும் சிலசமயங்களில் XX என்ற பரம்பரைஅலகுடன் பிறக்கும் குழந்தை ஆணுக்குரிய உடலுறுப்புக்கள், குணாதிசயங்களுடனும், XY என்ற பரம்பரை அலகுடன் பிறக்கும் குழந்தை பெண்ணுக்குரிய உடலுறுப்புக்கள், குணாதிசயங்களுடனும் பிறக்கும் வாய்ப்புள்ளது. அதுமட்டுமல்லாது இவை இரண்டும் ஒரே நபரில் தோன்றுவதற்கான வாய்ப்புகளும் உண்டு. இவ்வாறு பிறப்பவர்கள் முக்கியமாக குழந்தைப் பருவத்திலே தமது பாலியலைத் தீர்மானிப்பதில் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றார்கள். சில குழந்தைகள் தாங்கள் யாரை ஒத்திருப்பதாக உணருகிறார்களோ அவர்களுடனேயே தம்மை அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் வளர்ந்துவரும் போது இவ்வாறான கேள்விகளுக்கு விடைகளை விளங்கிக் கொள்ள முயற்சிக்கிறார்கள்.

ஒருவர் எந்தப்பாலைச் (sex) சேர்ந்தவரென தீர்மானிப்பது அவருடைய பிறப்புறுப்பு. ஒரு குழந்தை தனது பெயர், தான் தெரிவுசெய்யும் விளையாட்டுப் பொருட்கள், நண்பர்கள் மற்றும் தமது அனுபவத்தினூடாக தமது விருப்பு வெறுப்புக்களை தெரிந்து கொள்கின்றார்கள். இதனடிப்படையில் அவர்களுடைய நடையுடை, பாவனை அமைகின்றது, இது அக்குழந்தையின் பாலினமாக (gender) அமைகிறது.
ஆக, ஒருவருடைய பாலினம் பிறப்புறுப்பால் தீர்மானிக்கப்படுவதல்ல.
சிலர் தமது உடற்கட்டமைப்பிற்கும், தமது குணாதிசயங்களுக்குமிடையே ஒரு முரண்நகையை உணருகின்றார்கள் இதைப் பாலின அடையாளக் கோளாறு என்பர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் சிலர் தமது உடற்கட்டமைப்பை சத்திர சிகிச்சை மூலம் எதிர்ப்பாலனவர்களாக மாற விரும்புகின்றார்கள்.

திருநங்கையர், திருநம்பியர்களாக தம்மை அடையாளப்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துவருவதாக அண்மையில் பிரபல அமெரிக்க உளவியல் ஆய்வேட்டில் வெளிவந்த ஒரு கட்டுரை சுட்டிக் காட்டுகின்றது.




பலர் துணிச்சலுடன் பொதுவெளியில் தம்மை அடையாளப்படுத்த முன்வருவதை இக் கட்டுரை காட்டி நிற்கிறது. 2016ம் ஆண்டு அமெரிக்க அரச புள்ளிவிபரங்களின்படி 1,4மில்லியன் அமெரிக்கர்கள் திருநங்கை, திருநம்பியர்களாக தம்மை அடையாளப் படுத்தியுள்ளார்கள். அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் திருநங்கையர், திருநம்பியர்களின் வெளிப்பாடு ஆபிரிக்க, ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது அதிகமாகவே காணப்படுகின்றது. இதற்கான முக்கிய காரணமாக கருதப்படுவது மேலைத்தேச நாடுகளில் இவர்களுக்கான அங்கீகாரம் கிடைக்கப்பெறுவதாகும். அத்துடன் இவர்கள் வளமானவர்களாகவும், சுகதேகிகளாகவும் எந்தவிதமான வேலையும் செய்யக்கூடிய திறமைவாய்ந்தவர்களாகவும் இருக்கின்றார்கள். ஆனால் ஆபிரிக்க, ஆசிய நாடுகளிலுள்ள நிலமை வேறு. சிலர் தமது சொந்த வீடுகளிலிருந்து துரத்தப்படுகிறார்கள், சிலர் விபச்சாரத்தில் ஈடுபடுகிறார்கள், சிலர் திருட்டில் ஈடுபடுகிறார்கள், வேறு சிலரோ பிச்சையெடுத்து வாழும் நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள்.





குடும்பமே ஒருவரின் முதற் பல்கலைக்கழகமென எனது தந்தை சொல்வதுண்டு. ஆம், அங்கு தான் ஒரு மனிதன் பல்வேறுதுறைகளில் தன்னை வளர்த்துக்கொள்ள கற்றுக்கொள்ளுகின்றான். திருநங்கையர், திருநம்பியர்களுக்கு குழந்தைப் பருவத்திலே




தமது குடும்பத்தினரின் அன்பும், ஆதரவும், அரவணைப்பும் சற்று அதிகமாகவே தேவைப்படுகின்றது, ஆனால் அநேகமான தெற்காசிய நாடுகளில் இது அவர்களுக்கு கிடைப்பதில்லை. ஆகவே வாழ்வின் ஆரம்பமே சவால்கள் நிறைந்ததாக அமைந்துவிடுகின்றது. பல கலாச்சாரங்களில் திருநங்கையர்களும், திருநம்பியர்களும் குடும்பத்தவராலும், சமூகத்தாலும் தீண்டத்தகாதவர்களாகவே கணிக்கப்படுகின்றார்கள்.

சமூகத்தில் சிறுபான்மையினரை புறக்கணிக்கும்படி எந்த மதமும் போதிக்கவில்லை. விவிலியத்தில் இறைவன் ஆணையும், பெண்ணையும் படைத்து உங்கள் சந்ததியைப் பெருக்கிக் கொள்ளுங்கள் எனக் கட்டளையிட்டதாகவே கூறப்படுகின்றது. ஆண், பெண் தவிர மூன்றாவது பாலினம் விவிலியத்தில் குறிப்பிடப்படாத போதும் ஆணினுடைய உடைகளை ஒரு பெண் அணியக்கூடாது, ஒரு பெண்ணினுடைய உடைகளை ஆண் அணியக்கூடாது போன்ற வாசகங்கள் பதிவாகியிருப்பது திருநங்கையர்களையும், திருநம்பியர்களையும் அன்று முதலே கிறீஸ்தவ மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைக் காட்டி நிற்கின்றது.




இஸ்லாமிய மதத்தினர் திருநங்கையர்களையும், திருநம்பியர்களையும் அவர்களுடைய செயற்பாடுகளையும் பண்டைக்காலங்களில் எவ்வாறு கையாண்டனர் என்பது தெளிவில்லாத போதும், இன்று இவர்களைக் கையாள்வதில் இஸ்லாமிய நாடுகள் நாட்டுக்கு நாடு வேறுபட்ட நடைமுறைகளை கடைப்பிடிக்கின்றன. பௌத்த சிந்தனையில் புத்தபெருமான் பாலை அடிப்படையாக வைத்து மக்களை வழிநடத்தவில்லை. பௌத்த துறவிகள் ஓரினச்சேர்க்கையிலோ, எதிர்ப்பாலாருடன் உடலுறவு கொள்வதையோ பௌத்தமதம் அனுமதிக்கவில்லை. ஒருவரை வதைப்பதையோ, துன்புறுத்துவதையோ பௌத்தமதம் அங்கீகரிக்கவில்லை. ஆனால் பௌத்தமதம் திருநங்கையர்களையும், திருநம்பியர்களையும் எவ்வாறு கையாளுகின்றது என்பது அந்தந்த நாட்டுக் கலாச்சாரக் கட்டுமானங்களைப் பொறுத்து மாறுபட்டு வந்துள்ளதை அவதானிக்கமுடிகிறது.

இந்துமதக் கடவுள்களே ஆணும் பெண்ணும் இணைந்த சிலைகளாக






வடிக்கப்பட்டுள்ளனர். விஸ்ணு மோகினி அவதாரம் எடுத்ததாக மகாபாரதம் கூறுகின்றது, அத்துடன் மகாபாரதத்தில் வரும் பல பாத்திரங்கள் திருநங்கையர்களாகவும், திருநம்பியர்களாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளார்கள். ஆக, இந்துமதத்தில் ஆண்களும், பெண்களும் ஒருவருடன் ஒருவர் பிணைந்தே கடவுள்களும் வடிக்கப்பட்டுள்ளனர்.

எமது தலைமுறையினர் வித்தியாசமானவர்களென மூத்த தலைமுறையினர் கூறுவதுண்டு. ஆம், இது முற்றிலும் சரியானது. ஆண்டாண்டு காலமாக தீண்டத் தகாதவர்களாக ஒதுக்கப்பட்ட திருநங்கையர்களும், திருநம்பியர்களும் எமது தலை-முறையில் தமது உரிமைகளுக்காக போராட முன்வந்துள்ளது வித்தியாசமானது தான். தங்களின் முன்னோடியும், “ரோன்வெல்” போராட்ட முக்கிய நபருமான “மார்சா ஜோன்சனின்” வழியில் தாமும் போராடுகின்றார்கள்.
அவர்களுடைய உரிமைக்கான போராட்டம் நசுக்கப்படாமல் பேசுபொருளாக மாற்றப்பட்டுள்ளதும் எமது தலைமுறையின் காலத்தில் தான் என்பதில் எங்கள் தலைமுறை பெருமை கொள்ள முடியும். அவர்களுடைய போராட்டங்கள் நிட்சயம் வெற்றிபெறும், அவர்களுக்கான சமூக அந்தஸ்தும், அங்கீகாரமும் ஒருநாள் முற்றாக கிடைக்கும்.



**Reference**
https://www.cpr.org/2016/07/01/1-4-million-adults-identify-as-transgender-in-america-study-says/
https://www.bbc.com/news/world-asia-india-46780219
https://en.wikipedia.org/wiki/Transgender_people_and_religion
https://www.pinknews.co.uk/2018/01/23/hindus-have-a-long-and-surprising-history-of-supporting-transgender-people-says-expert-on-thought-of-the-day/
https://en.wikipedia.org/wiki/Hinduism_and_LGBT_topics
https://en.wikipedia.org/wiki/LGBT_in_Islam
https://www.bibleref.com/Genesis/5/Genesis-5-2.html
https://www.biblegateway.com/passage/?search=Deuteronomy%2022%3A5&version=KJV
https://en.wikipedia.org/wiki/Christianity_and_transgender_people
https://www.hrc.org/resources/stances-of-faiths-on-lgbt-issues-buddhism
https://www.bbc.co.uk/newsround/52981395
https://www.youtube.com/watch?v=YxL5qfbtKqg




உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் வளர்ச்சிப் படிநிலைகள் உண்டு. அவற்றினை அவதானிப்பது பெற்றோரின் அதிமுக்கிய பொறுப்பாகும். அழுதல், பால் குடித்தல், விரல்களை இறுகப் பிடித்தல், கை கால்களை அசைத்தல், சிரித்தல் என அவர்களது வளர்ச்சி விரிவடைந்து செல்லும் ஒவ்வொரு படி நிலைகளும் முக்கியமானதும், அவதானிக்கப்பட வேண்டியவையும். குழந்தைகளின் வளர்ச்சிப் படிநிலைகளில் அவர்களது மொழி வளர்ச்சி மிக முக்கியமானதாகும்.

குழந்தைக்கு 1வயது இருக்கும்போது, அக்குழந்தை எளிய சொற்களைக் கூறத் தொடங்குகிறது. உ+ம்: அம்மா, அப்பா, கார்...
இரண்டு வயதில் இரண்டு சொற்தொடர். உ+ம்: அப்பா வேலை, lese bok...
இந்த வயதில் தான் அவர்கள் கேட்க ஆரம்பித்து, பெரியவர்கள் சொல்வதைப் பின்பற்றத் தொடங்குவார்கள்.

மூன்று வயதில் மூன்று அல்லது நான்கு சொற்களை உள்ளடக்கி வசனமாக பேசுவர். அத்துடன் இந்த வயதிலேயே பல சொற்களை கற்றுக் கொள்ளுகிறார்கள்.
நான்கு வயதில் அவர்களது மொழி வளர்ச்சி அடைவதோடு, இலக்கணத்தோடு பேசவும் ஆரம்பிக்கிறார்கள்.

ஐந்து வயதில் 4-6 சொற்களை அடக்கிய பெரிய வசனங்களை பேசுவர்.
ஆறு வயதில் அவர்கள் கடினமான வாக்கியங்களை பேச முடியும் அத்துடன் வாசிப்பதிலும் தமது ஆர்வத்தினை வெளிப்படுத்துவர்.

குழந்தைகள் தமது மொழியினை, வார்த்தைகளை உரிய நேரத்தில் வெளிப்படுத்துவது முக்கியம். சில குழந்தைகள் பேச ஆரம்பிப்பதற்கு மிகவும் தாமதம் ஆகின்றது. அவ்வாறான பிள்ளைகளோடு நாம் பேசும்போது வார்த்தைகளோடு சேர்த்து சைகை-களையும் பயன்படுத்துதல் சிறப்பாகும். அவர்களது மொழி வளர்ச்சிக்கு சைகைமொழி அல்லது உடல்மொழி முக்கியமான கருவியாகும்.

பெற்றோர் தமது பிள்ளைகளோடு பேசும்போது சைகைகளையும் (உடல்மொழியையும்) பயன்படுத்தினால் அவர்களது பிள்ளைகள் மொழியை புரிந்து கொள்வதற்கு பெரும் உதவியாக இருக்கும். அம்மொழியை அவர்கள் இலகுவாக உள்வாங்கி பின்னர் வெளிப்படுவதற்கும் உதவிபுரிகிறது.

பிள்ளைகளின் பேச்சு திறனை வளர்க்க வேண்டுமாயின் பெற்றோர் வார்த்தைகளுடன் சேர்த்து, உடல் மொழியையும் பாவிக்க வேண்டும். சைகைகள் பெரும்பாலும் ஒரு விளக்கப்படமாக இருப்பதால் வாய் மொழியை விடவும் இலகுவாக புரிந்து கொள்ள முடியும்.

நாம் பிள்ளைகளுடன் சைகைகள் பாவித்து உரையாடும்போது, பிள்ளைகளுக்கு வாய் மொழித்திறன் உருவாகும் முன்னதாகவே, பெற்றோருடன் உரையாட தொடங்கிவிடுவார்கள். காரணம் அவர்களிடம் சைகை மொழி இருக்கிறது. பிள்ளைகள் வாய் மொழியை பாவிப்பதற்கு முன்பதாகவே, சைகைகளை பாவிக்கிறார்கள் என ஆராய்ச்சி தெரிவிக்கிறது.

பிள்ளைகளுடன் பெற்றோர் சைகை பாவித்து கதைப்பது அவர்களின் மொழிப் புரிதலை அதிகரிப்பது மட்டுமல்லாது சொல்லகராதியையும் அதிகப்படுத்துகிறது. இது பிள்ளைகளுக்கு வாசிக்கும் திறனையும் அதிகப்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

Jenita shanker
Pedagogikk leder ved Flaktveit barnehage

**வெளிச்சம்** -கருணாகரன்-



இரவைக் கொத்திக் கொத்தி
உடைத்துக் கொண்டேயிருக்கிறது
தூக்கமற்ற பறவை
கொத்திக் கொத்திக் கொத்தி
இரவின் ஆழத்துள் புதைந்திருக்கும் முத்து
என்னவென்று தேடுகிறது.
திடீரென
அதன் கூரலகிற் கொத்துண்டது
சூரியன்
சூரியனைக் கொத்தியதும்
பளிச் சென உடைந்து
சிதறிப் பரந்தது
வெளிச்சம்.
பகலின் கீச்சுக் குரல் மெல்லக் கேட்டது.

## கோடைகால பயிற்சி வகுப்பு நடவடிக்கைகள்




2021ஆம் ஆண்டு கோடைகால விடுமுறையில் கொரானா தொற்றுநோய் காரணமாக ஏராளமான குடும்பங்கள் விடுமுறைப் பயணங்களைத் தவிர்த்து உள்ளூரிலேயே தங்கியிருப்பர் என நம்பப்படுகிறது.


பாடசாலை விடுமுறை என்பதனாலும் சிறுவர்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கி இருப்பர். அவர்கள் வெளியரங்க விளையாட்டுக்களில் தங்களை ஈடுபடுத்துவது மிகவும் அரிதாகவே இருக்கலாம். இந்நிலை அவர்களுக்கு உடல் மற்றும் உள ரீதியான தாக்கங்களையும் ஏற்படுத்தலாம். எனவே நோர்வேயின் பெரும்பாலான நகராட்சிகளிலும் சிறுவர்களுக்கான பல்வேறு பயிற்சிகள், விளையாட்டுகள், உடற்பயிற்சி, நீச்சல், கலைவகுப்புகள் (பாடல், நடனம், இசைக்கருவி மீட்டல்), புகைப்படக்கலை என பலதரப்பட்ட பயிற்சி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

### அனைத்துப் பயிற்சிகளும் இலவசம்

அனைத்துப் பயிற்சிகளும் இலவசம் என அறிவிக்கப்பட்டுள்ளது.
இன்றைய சிறுவர்கள் ஏனைய சக சிறுவர்களுடன் தமது ஓய்வு நேரத்தில்
விளையாடுவது மிகவும் அரிதாகி விட்டது. வீட்டினுள்ளிருந்து playstation, mobil போன்றவற்றில் டிஜிட்டல் விளையாட்டுக்களில் மட்டுமே அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இதனால் அவர்கள் சமூக உறவினை பெரிதும் இழந்து போகிறார்கள். அது அவர்களது சாதாரண வளர்ச்சிக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாம்.
அவர்கள் மிகப்பெரும் உளவியல் தாக்கத்துக்கு உள்ளாகலாம்.
இவ்வாறான தாக்கங்களுள் நமது சிறுவர்கள் விழாமல் காப்பாற்றவும், அவர்களை சிறந்த பிரசைகளாக வளர்க்கவும் எண்ணி நோர்வே நகராட்சிகள் கோடைகால நடவடிக்கைகளினை மேற்கொள்ளுகின்றன. எனவே உங்கள் சிறுவர்களையும் இப்பயிற்சிகளில் இணைத்துக் கொள்ளுதல் அவர்களது உடல் உள வளர்ச்சிக்கு சிறப்பாய் அமையலாம்.




Dr. விமலநாதன் MD PhD
(Senior Consultant Cardiologist, Oslo, Norway)



COVID-19 கொரோனா தடுப்பு மருந்தாக ஆரம்பத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட AstraZeneca ஊசியை சில மாதங்களின்முன் போட்டுக் கொண்டேன்.
தற்காலிகமாக நோர்வேயில் அந்தத் தடுப்பூசி நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. இன்நிலையில் இரண்டாவது தடுப்பூசியைப் போட்டுக் கொள்ளலாமா?
ஆரம்பத்தில் AstraZeneca ஊயைப் போட்டுக் கொண்டதால் எதிர்விளைவுகள் ஏற்பட வாய்ப்பு உண்டா?

Astra Zeneca தடுப்பூசியின் பக்கவிளைவுகள் நிரூபிக்கப்பட்டதிலிருந்து பல குழப்பங்கள் நிலவிவருவது உண்மையே, வெவ்வேறு நாடுகள் வயதெல்லை போன்ற நிபந்தனைகளுடன் பாவனையை அனுமதித்துள்ளன. ஆனால் நோர்வேயைப் பொறுத்தளவில் Astra Zeneca தடுப்பூசியின் பாவனை முற்றாக தவிர்க்கப்பட்டுள்ளது. நோர்வேயில் சுகாதார ஊழியர்கள் உட்பட கணிசமான பலருக்கு முதலாவது Astra Zeneca தடுப்பூசி ஏற்றப்பட்டது. 12 வாரங்களின் பின்பு இவர்களுக்கு இரண்டாவது ஊசிபோடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இவர்களுக்கு இன்று நோர்வேயில் பாவனையிலிருக்கும் Pfizer அல்லது Moderna தடுப்பூசி போடப்பட்டுவருகின்றது. உடனடியாக ஏற்படும் பக்கவிளைவுகள் தவிர வேறுபக்க விளைவுகள் எதுவும் இதுவரை பதிவு செய்யப்படவில்லை. இந்தத் தடுப்பூசிகளின் நீண்டகால பக்கவிளைவுகள் ஏதாவது இருக்குமா என்பதுபற்றி எவராலும் எதிர்பு கூறமுடியாது. இரண்டு தடுப்பூசிகள் போட்டவர்கள் மட்டுமே பயணத்தடையுட்பட சமூகவிலகல் நீக்கப்பட்டு இயல்பு வாழ்க்கைக்கு திரும்பமுடியும் என்ற நிலையில் இரண்டாவது தடுப்பூசியைப் போட்டுக் கொள்வது புத்திசாலித்தனமானது.

covid 19 வைரஸ் தொற்று நோய் உருவாகிய பின் தற்போது பலவகையான வைரசுகள் உருவாகியுள்ளன. அதாவது Indian mutant, Britisk வைரஸ், Africa வைரஸ் என பல வகை..
இவை பற்றி உங்கள் விளக்கம் என்ன?

மரபணுக்களில் மாறுபாடு (Mutation) ஏற்படுதல் என்பது உயிரினங்கள் தோன்றிய காலத்திலிருந்தே நிகழ்ந்துவருகின்றது. இதனடிப்படையில் உருவானது தான் உலகில் உயிரினங்கள் தோன்றியதற்கான சார்ல்ஸ் டார்வினின் கூர்ப்புக் கொள்கை. இவ்வாறான மாறுபாடுகள் வாழபாட்டால்க்கைச் சக்கரத்தினூடாக பரம்பரை பரம்பரையாக கடத்தப்படுகின்றன. குறுகிய வாழ்க்கைச் சக்கரத்தினூடாக சில நொடிகளிலேயே பல்கிப்பெருகும் நுண்ணுயிர்களில் இவ்வாறான மாறுபாடுகள் நாளாந்தம் கோடிக்கணக்கில் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றது. இவ்வாறான மாறுபாடுகளுடன் தோன்றும் உயிரினங்கள் சூழலில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற போது அவை கவனத்தை பெற்றுக்கொள்கின்றன. அந்தவகையில் 2019இல் வெளிப்பட்ட கோவிட்-19 வைரசும் இதில் அடங்கும். இந்த வைரசில் ஏற்பட்ட மாறுபட்ட இயல்பு இங்கிலாந்தில் தீவிர நோய் பரவலையும், பாதிப்பையும் ஏற்படுத்தியதால் அதிக கவனத்தை பெற்றது. தொடர்ந்து தென்னாபிரிக்காவில் ஏற்பட்ட இன்னொரு மாறுபாடு அங்கு தீவிர நோய் பரவலையும், பாதிப்பையும் ஏற்படுத்தியதால் அதுவும் அதிக கவனத்தை பெற்றது. இப்போது இந்தியாவில் தோன்றியுள்ள மாறுபாடடைந்த வைரசினுடைய தாக்கத்தை நாம் கண்டுகொண்டிருக்கின்றோம்.
இன்று தடுப்பூசிகள் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணம் இந்த வைரசினுடைய வாழ்க்கைச் சக்கரத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் மாறுபாடடைவதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது தான் எமக்குள்ள தெரிவு இல்லாவிடில் இது ஒரு தொடர்கதையாக இருக்கும் வாய்ப்புகளே அதிகம்.

எனக்கு சாதாரணமான இரத்த அழுத்தம் இருக்கிறது. நான் அதற்கான மருந்துகள் எடுத்து வருகிறேன். இருந்தாலும் வேறு நோய் காரணமாக வைத்திய சாலைக்கோ அல்லது வைத்தியரிடமோ சென்றால் அவர்கள் அழுத்தம் பார்க்கிறார்கள். அதன் போது இரத்த அழுத்தம் மிகவும் அதிகமாக காட்டுகிறது. காரணம் என்ன?

சிலருக்கு இவ்வாறான சந்தர்ப்பங்களில் தங்களை அறியாமலேயே ஒருவித பதட்டம் காரணமாக இரத்தஅழுத்தம் கூடுவதுண்டு (White coat hypertension). இதனை தெளிவுபடுத்த உங்கள் குடும்ப மருத்துவருடன் பேசி 24 மணிநேர குருதியழுத்தம் அளந்து பார்க்க வேண்டும். அது சராசரியாக சரியான இரத்த அழுத்தத்தை காட்டுமாகவிருப்பின் நீங்கள் இதுபற்றி கவலை கொள்ளத் தேவையில்லை.

எனது வீட்டிலே இரத்த அழுத்தம் பார்க்கும் கருவி வைத்திருக்கிறேன். அதிலே இரத்த அழுத்தம் சோதிப்பது பற்றி.....

ஏன் என்ற கேள்வி கேட்காத ஒரு சமூகத்தின் பிரதிநிதிகள் நாங்கள். நீங்கள் இரத்தஅழுத்தம் அளக்கும் போது அது கூடுதலாக காட்டினால் உங்களால் என்ன செய்யமுடியும்? வைத்தியருடைய ஆலோசனையின்றி மருந்தைக் கூட்டவோ குறைக்கவோ முடியாது. ஆக, நீங்கள் அடுத்தமுறை உங்கள் மருத்துவரை கண்டு ஆலோசனை பெறும்வரை பதட்டத்தால் உங்கள் இரத்தஅழுத்தம் கூடுதலாக இருப்பதற்கான சாத்தியமே அதிகம். இப்போது சொல்லுங்கள், இரத்த அழுத்தத்தை அளந்ததால் நீங்கள் பெற்ற பயன் என்ன?
வைத்தியரிடம் வருடத்திற்கு 3 - 4 தடவை சென்று பொதுவான சோதனை செய்துகொள்வது சாலச்சிறந்தது.






# மனோவின் சின்னட்டிக்கதைகள்

## அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாழ்!

1-
நான் ஒரு பாடலைப்பாடி முகநூலில் பதிவேற்றினேன்.
ஆகா! அருமை என்றார்கள்.
அற்புதம் என்றார்கள்.
உன் குரல் இனிமை என்றார்கள்.
நான் மனதார நம்பினேன்
நான் தொடர்ந்தும்
பாடிக்கொண்டே இருக்கிறேன்.
- பிறகேன் அங்கின உங்களுக்கை
முணுமுணுப்பு? -

2-
என்னுடைய நண்பன் “தான் நன்றாகச் சமைப்பேன்” என்றான்.
நான் நன்றாகச் சுவைத்துச் சாப்பிடுவேன் என்றேன்.
அடுத்தநாளே அவன் எனக்கும் சேர்த்துச் சமைத்துக் கொணர்ந்திருந்தான்
நான் உருகிப்போனேன்.
சாப்பாடு என்னவோ சுமார்தான். தானம் கொடுக்கிற மாட்டை பல்லைப்பிடித்துப் பார்க்கக்கூடாதென்பர். அமைதியாகச் சாப்பிட்டு முடித்தேன்.
ஒரு மணிநேரம் கூட ஆகியிருக்காது.
என்ன இது! வயிறு ஏதோ புதுவிதமாய் பாடாய் படுத்துகிறதே!
அ..ய்....யோ! முடியவில்லை. நாரி எல்லாம் வலிக்கிறது!
களைத்தே போய்விட்டேன். உடல் சோர்ந்தது.
திரும்பவும்.....திரும்பவும்....!
அங்கேயே தங்கிவிடலாமோ என்று கூட யோசித்தேன்.
ஒருவாறு ஆடி அடங்கி அமைதியாகி, நடக்கமுடியாது, சுவரில் கைகளைப்பிடித்து, எழுந்து வந்து கதிரையில் அமர்ந்தபோது,
நண்பன் கேட்டான். எப்பிடி மச்சான் சாப்பாடு?
என்னத்தைச் சொல்ல..?
வலியை வெளிக்காட்டிக்கொள்ளாது, மிக அருமை என்றேன்.
அவனைக் காயப்படுத்துவது அழகல்ல. என் இயலாமையையும் மறைத்து, சற்று அதிகமாகவே புகழந்துவிட்டேன்.
அவன் மகிழ்ந்தான். மகிழ்ச்சி.
அவன் அதோடு நிறுத்தியிருக்கலாம்.
இன்றும் அதே சாப்பாட்டுப் பார்சலோடு வந்து நிற்கிறான்.
ஐயோ!

## வேந்தனும் மேனகையும்

ஒரு வருடமாகியும் இளவேந்தனுக்கு முகக்கவசம் பழக்கத்திற்கு வரவில்லை. மிகுந்த அசூசைப்பட்டான். அநேகவேளைகளில் மூக்கிற்கு கீழேயே அவனின் முகக்கவசம் இருந்தது. தண்டப் பணத்துக்குப் பயந்தே அவன் கவசம் அணியலானான்.
கொரோனாவுக்கு பயந்த மனிதரெல்லாம் இவனைப்பாரத்து வெருண்டனர். பலர் எச்சரிக்கை செய்தனர்.

இன்றும் பணியிடத்தில் மூக்கின் கீழே கவசத்தை தளர்த்தியவாறே பணியில் மூழ்கியிருந்தான் இளவேந்தன். அலுவலகத்திற்கு வெளியே இவன் பாரத்தபோது இடையிடையே ஒரு பெண் இவனை உற்றுப் பார்ப்பதை அவதானித்தான். ஒரு கட்டத்திற்கு மேல் அந்த மேனகையின் பார்வையால் இவனால் பணிதொடரமுடியவில்லை.
இளவேந்தன் குழம்பிக்கொண்டிருந்த போது கதவைத்திறந்து உள்ளேவந்த மேனகை நேராகவே இவனிடம் வந்து பொரிந்து தள்ளினாள்.
“நானும் நீண்டநேரமாவே பார்த்துக்கொண்டு நிற்கிறேன். நீ உன் முகக்கவசத்தை உயர்த்துகிறாயே இல்லை. ஒரு பொறுப்புள்ள மனிதன் நீ இவ்விதம் நடந்து கொள்ளலாமா?”
தவறு தன்னடையது. இளவேந்தன் கைகளை உயர்த்தினான்.

“அம்மணி! தவறு தான் என்னை மன்னித்துக்கொள்ளுங்கள்!” என்றவாறு மூக்குக் கவசத்தை மேலுயர்த்தினான்.
ஆனாலும், மேனகை அடங்கவில்லை. தொடர்ந்து பொரிந்துகொண்டே நின்றாள்.
பொரியப் பொரிய அவளது கோபமும் எல்லைமீறிக்கொண்டே போனது..
திரும்பத்திரும்ப மன்னிப்பைக்கோரியும் அடங்காத மேனகையால் தன்னிலை இழந்தான் வேந்தன்.
“நீ ஆகத்தான் குதிக்கிறாய்! நான் தான் உன்னிடம் பலதடவை மன்னிப்பைக்கோரியிருக்கிறேனே!
பிறகும் ஏன் சன்னதம் ஆடுகிறாய் உனக்கென்ன வருத்தமா?” என்று படபடத்து அடங்கினான் வேந்தன்.
அடங்கிப்போன மேனகை அமைதியாகச்சொன்னாள்.
“அன்பரே! மருத்துவமனையிலிருந்து சென்ற வாரம் தான் வெளியே வந்தேன்.
கொரோனாவின் கோரத்தை அனுபவித்தவள் நான்! எச்சரிக்கையாக இரு!!”

## ருத்ர தாண்டவம்

நான் அரங்கேறினேன். சென்றவாரம் எனது அரங்கேற்றம் சிறப்பாக நடந்தேறியது. பலரும் வாழ்த்தினார்கள். பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. சிலர் சின்னச்சின்ன குறைகளையும் சுட்டிக்காட்டினர். அவர்கள் குறைகளைச் சுட்டிய விதம் அருமையாக இருந்தது. வரவேற்கக்கூடியதாக இருந்தது. தங்களுக்கும் விசயம் தெரியுமென்பதைக் காட்டுவதற்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ அவர்கள் அதை முன்வைக்கவில்லை. என்னிலும், எனது கலையிலும் அவர்களுக்கு இருந்த அக்கறையை அவர்களிடம் காணமுடிந்தது. எனது ஆர்வம் அறிந்து, மிக நுட்பமான விடயங்கள் பலவற்றைப் பேசினர். அவர்களுக்கு மனம் நிறைந்து நன்றி சொன்னேன்.

என்னுடைய குரு என்னிடம் அதிகம் பேசவில்லை. எனது நெருங்கிய நண்பர்கள் சிலரும் எதுவும் பேசவில்லை. இது எனக்குப் பெரும் வருத்தத்தினைத் தந்தது. ஏன் என்று சிந்தனை ஓடியது. அவர்களுக்கு என் மீது பொறாமை ஏற்பட்டிருக்கலாம் என எனது மூளை சொல்லியது. ஆனாலும், மனசு அதை ஏற்க மறுத்தது. அவர்கள் எனக்கு நெருங்கியவர்கள், அவர்கள் ஏன் பொறாமைப்படவேண்டும்?

நான் புகழ் மயக்கத்தில் அவர்களிடம் ஏதோ எதிர்பார்க்கிறேன் போல. அது தான் எனக்கு வருத்தத்தை தருகிறது என்ற முடிவுக்கு வந்தேன். எதிர்பார்ப்புகள் ஏமாற்றங்களாக அமையும் போது அவை வலிகளைத்தரும் என்பது உண்மைதான். ஆனால் பொறாமை என்பது என்ன? அந்தப் பொறி என்னிடம் ஏன் முளைவிட்டது?

இயலாமைகள், ஏக்கங்கங்களாக பெருமூச்சுகளாக வெளிப்பட சாத்திய முண்டு. ஆனால் அது பொறாமை இல்லையே? பொறாமை, தன்னையும் அழித்துப் பிறரையும் அழிக்கு மென்கிறார்கள். பொறாமை என்பது மனித இயல்பா? அது நோய் என்றும் சொல்கிறார்களே? அந்தப் பொறி எனக்குள் ஏன் முளைவிட்டது? நான் ஏன் அவர்களை அவ்விதம் நோக்கினேன்? அவர்கள் என்னுடன் உரையாடாமைக்கு பலவேறு காரணங்கள் இருக்கலாம்! ஆனால், கணப்பொழுதில் அது பொறாமைதான் என்ற முடிவுக்கு ஏன் வந்தேன்? நோய் எனக்குள்ளும் அரும்புகிறதா? நோய் என்னைக் குடைந்தெடுக்க மனதுக்குள் ஏதோ படபடத்தது. படபடப்பு மெதுமெதுவாய் உருவெடுத்து ஆடத்தொடங்கியது. நான் ஆடினேன். சுற்றிச்சுழன்று ஆடினேன். அனல் பறக்க ஆடினேன். மனது வானத்திற்கும் பூமிக்குமாய் கனலாய் பொங்கி ஆடியது.

## கொரோனா விளையாட்டு

காட்சி :1
சிவதொண்டன் வழமைபோல தனது சைக்கிளை கடைவாசலில் சாத்திவிட்டு, தொலைபேசியை நோண்டிக்கொண்டிருந்தான்.
காட்சி : 2
கடைஊழியர்கள் தமக்குள் கண்சிமிட்டி உரையாடிக் கொண்டார்கள். கடை முதலாளியும் அதில் பங்கேற்றுக்கொண்டார்.
ஒரு ஊழியன் மெதுமெதுவாகச் சென்று சைக்கிளை எடுத்து ஒளித்து விட்டு வந்தான். இந்த விளையாட்டை அவர்கள் மூன்றாவது தடவையாகவும் வெற்றிகரமாகத் தொடர்ந்தார்கள்.
காட்சி : 3.
சிவதொண்டன் திரும்பிப் பார்த்தபோது சைக்கிளைக் காணவில்லை. அவன் மனதுக்குள் சிரித்து தலையை ஆட்டினான். “பகிடியை விட்டுப்போட்டு சைக்கிளை தாங்கோடாப்பா“ என்றான்.
அவர்கள் இம்முறை இன்னும் தீவிரமாக விளையாடினார்கள்.
“முதல் ரெண்டுதரம் நாங்கள் ஒளிச்சது உண்மைதான். அது உனக்கு ஒரு விழிப்புணர்வு வாறதுக்காக. இந்தமுறை சத்தியமாய் நாங்கள் எடுக்கவில்லை” என்று மிக ஆக்ரோசமாகவே விளையாடினார்கள்.

சிவதொண்டனுக்கு பயம் தொற்றி விட்டது. பாரிஸில் கண் இமைக்கும் நேரத்துள் சைக்கிளை அடித்துக்கொண்டு போகும் கதைகளை நிறையக் கேள்விப்பட்டிருக்கிறான். முதல் விளையாட்டுகளில் ஒளித்து வைத்த இடங்களில் ஓடியோடி தேடினான். கிடைக்கவில்லை. அவனுக்கு பயமும் கவலையும் ஒருங்குசேர தொற்றியது.
“ப்ளீஸ் பகிடி விடாதேங்கோடாப்பா எனக்கு நேரம்போட்டுது...”
என்றுகெஞ்சிப்பார்த்தான்.
அவர்கள் அசையவில்லை.
சைக்கிள் தொலைந்து விட்டது என்ற கவலையோடு அவன் அந்த இடம் விட்டு அகலத்தொடங்கினான். அவர்கள் சிரித்தபடி அவனைக் கூப்பிட்டு எச்சரித்து விளையாட்டை முடிவுக்கு கொண்டு வந்தார்கள்.

காட்சி : 4
ஒளித்து வைத்த புதிய இடத்தில் சைக்கிளை எடுப்பதற்காக அவர்கள் போனார்கள். சிவதொண்டனுக்கும் தொலைந்த சைக்கிள் திரும்பி வந்த மகிழ்ச்சியில் நெஞ்சு பூரித்தது.
அனால், அங்கேதான் “கிளைமாக்ஸ்” காத்திருந்தது. வைத்த இடத்தில் சைக்கிளை காணவில்லை. அது உண்மையிலேயே திருட்டுப் போய்விட்டது.
காட்சி : 5
இந்தக்காட்சியை நீங்களே கற்பனை செய்து கொள்ளுங்கள்!!




# புகைப்படக்காறன்



## படங்களோடு பேசுதல்



சாந்தன் சாந்தகுணம்
Santhan Santhagunam - London

*சாந்தன். சிறந்த அரங்காற்றுக் கலைஞன், புகைப்படக் கலைஞன்.*
*1980களின் நடுப்பகுதிலில் இருந்து புகைப்படக்கலைக்குள் சாந்தனும் பிரவேசித்தார்.*

*படைப்பாற்றலும், பரிசோதனை முயற்சிகளும் நிரம்பப்பெற்ற ஒரு புகைப்படக் கலைஞன் என்பதாகும். சலிப்படையாப் படைப்பாளி. பிரமிப்பூட்டும் காட்சிப் படிமங்களுக்குச் சொந்தக்காரன். சட்டகத்துக்கு அப்பாலும் நம்மைக் காட்சியைத் தேடவைக்கும் படைப்பாளி. இது எல்லோருக்கும் சாத்தியமாவதில்லை. அகண்ட காட்சிப் படுத்தலில் தான் விரும்பும் ஒரு பொருளை, ஒரு பகுதியை மட்டும் துல்லியமாக்கி, அதனை மட்டுமே நமக்குக் காண்பிக்கும் நுட்பமும், அழகும் ரசனைக்குரியது.*

*இதில் அவருக்கே உரித்தான நுட்பம் என்னவெனில், 85m.m லென்ஸ் கொண்டு பதியப்பட்ட படம்போல நம்மை நம்பவைக்கும் படங்களை சாந்தன் 50m.m. லென்ஸ் பாவித்து எடுத்திருப்பதுதான். இது தூர அளவுகளையும், ஒரு பொருளுக்கும் அதன் சுற்றாடலுக்குமிடையிலான இடைவெளிகளையும் கச்சிதமாகக் கணக்குப் போட்டு சட்டகப் படுத்துவதாகும்.*
*பார்வையாளரைப் படைப்பாளியாக்கும் வல்லபம் பொருந்தியதாக சாந்தனின் பல படங்களை அவதானிக்க முடியும். அழகிய மலர்கள் கையில் கிடைத்தால் அவற்றை ஒரு அழகான சாடியில் வைத்தோ அல்லது செண்டாகப் பொத்தியோ அல்லது ஆரமாய்க் கோர்த்தோ மேலும் அழகூட்ட இரசிகமனதுக்குத் தோன்றும். அதுபோல சாந்தனின் சில படங்களைப் பார்க்கும்போது, பார்த்து இரசிப்பதோடு மட்டுமல்லாது, நாமும் அந்தப் படம் பற்றிய ஒரு கவிதையையோ, ஒரு குறிப்பையோ, குறைந்தபட்சம் ஒருவரித் தலைப்பையோ இட்டுப் பார்க்க மனம் துருதுருக்கும். இப்படி, ஒரு படைப்பினூடாக இன்னொரு படைப்பாளியை அருட்டி நகர்த்தும் அழகியல் கொண்ட சாந்தனின் பல படங்களை உதாரணமாகச் சொல்ல முடியும். இந்தப் பக்கத்தில் பதியப்படும் மண்ணித்தரை படத்தைக்கூட உதாரணமாகக் கொள்ள முடியும். இங்கே படத்துக்கான ஒரு உதாரணக் கவிதையையும் பதிவு செய்கிறேன்.*

## மண்ணித்தறை

உச்சிவானத்தில் மிதந்து திரியும் முகில்களையும், பறவைகளையும்
எட்டித் தொட்டுவிடுவதாய் நெடுநெடுவென நெடுத்து
நெஞ்சு நிமிர்த்தி உயர்ந்து நின்ற மணல் மலைகள்.

தொட்டுத் தடவலாம் பனைவட்டுகளை இந்த
மணல்மலை முகடுகளில் ஏறியிருந்து.
எங்கள் கரைகளின் காதலர்களும் இவர்கள்தான்
காவலர்களும் இவர்கள்தான்.
எல்லைக்காவல் போர்வீரர்களைப்போல்
கெப்பேறுடன் கரை காத்தவர்கள்.

செல்லமாய்த் தவழ்ந்து வந்தாலுமோ, மல்லனாய் எழுந்து வந்தாலுமோ
கோடாலிமுறிச்சான் அலைகளை
தடுத்தாட்கொள்ளும் மடிகொண்ட மலைகள்.

இப்போ....
அடிவேருடன் அகழ்ந்தள்ளி
அடுத்தடுத்த சந்ததியின் வேரிலும் தேசத்தின் மார்பிலுமென
கொள்ளி வைத்துக் கொண்டார்கள் மண்மீட்பர்கள்.
எல்லை தாண்டி கரைவந்தேறிப்போன கடலின் காலடிகள்
இன்னமும் ஈரமாகத்தான் இருக்கிறது. அலைகள் இனியும் வரும்.

போ யாழ்ப்பாணமே....
அடுத்த தலைமுறைகள் உன்னை
எப்போதாவது கடலுக்கடியில் வந்து காணவும், ஆயவும்கூடும்.
உப்புத்தைலத்தால் கழுவப்பட்ட நித்திய நகரமாக
கடலுக்கடியில் வாழ்வாயாக.

-தமயந்தி-

கலைநயம் பொதிந்ததாய் நாம் காணும் சாந்தனின் பல படங்களில் தனியே அழகியல், தொழில்நுட்பம் என்பவற்றுக்கு அப்பால் அவரது அரசியலையும், சமூகக்கோபம், விமர்சனங்களையும் நாம் அவதானிக்க முடியும். அத்தகைய படங்களில் ஒன்றுதான் இந்த மண்ணித்தறை படமும்.



உள்நாட்டு யுத்த காலங்களுக்கு முன் இந்த இடங்களில் மிக உயர்ந்த மணல் மலைகள் இருந்தன. கடல் அத்துமீறி ஊருக்குள் நுழைந்துவிடாமல் காவல் அரண்களாக, தடுப்பு மதிற்சுவர்களாக அவை திகழ்ந்தன. மணல்க் கொள்ளையர்களால் அத்தனை மணல்மலைகளும் சூறையாடப்பட்டு வெறும் கட்டாந்தரையாக மாறிப்போய்க் காணப்படுகிறது. கட்டாந்தரையாக மட்டுமல்ல, கடல்மட்டத்தைவிடவும் தாழ்வாக கரைகள் அகழ்ந்தெடுக்கப் பட்டு விட்டன. எதிர்காலத்தில் கடல் ஊர்களுக்குள் புகுந்து நீண்டபெரும் பிரதேசத்தைக் கடல் விழுங்குவதற்கான அத்தனை சாத்தியங்களும் உருவாக்கப் பட்டு விட்டன. இப்போது மீண்டும் மேற்கண்ட படத்தை இந்தச் சேதி ஏற்படுத்தும் புரிதலுடன் பார்ப்போமானால் படம் சொல்லிநிற்கும் இன்னொரு பக்கத்தை நாம் உணர முடியும். அத்தகைய படங்களில் ஒன்றாக இந்தக் கிணற்றடிப் படத்தையும் முக்கியமாகச் சுட்டிக் காட்ட முடியும்.

லண்டன் நகரத்தைப் பொறுத்தவரை 90களின் தொடக்கத்திலிருந்து இற்றைவரை நிகழ்ந்த, நிகழ்ந்து கொண்டிருக்கின்ற நூற்றுக்கணக்கான கலை இலக்கிய நிகழ்வுகள், அரசியல் சமூகக் கூட்டங்கள், சந்திப்புக்கள், தமிழர்தரப்புப் போராட்டங்கள், விழாக்கள் என புகைப்படங்களாகப் பதிவு செய்து கொண்டிருக்கும் கலைஞர்கள் ஓவியர் கிருஸ்ணராஜாவும், சாந்தனுமாகும். இவற்றிற் பல ஆயிரக்கணக்கான படப்பதிவுகள் லண்டன் தமிழரின் வரலாற்று ஆவணங்கள் என்பது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதாகும். இவர்களின் இத்தகைய படங்களை ஆவணப் படுத்திப் பவுத்திரப் படுத்துதல் கட்டாயமானதாகும்.

சாந்தனின் படங்களையிட்டு பதிப்பாளரும் கவிஞருமான தோழர் கரவைதாசனும் நானும் பல தடவைகள் உரையாடியிருக்கின்றோம். சாந்தனின் சில படங்களைப் பார்த்து "அடடா, இப்படியொரு படத்தை நானும் எடுக்க வேண்டும்" என எண்ணியதும், முயற்சித்ததும் உண்டு.



புகைப்படவியல் கற்கும் மாணவர்கள் என்னிடம் பயிற்சிகள் பெற்றுக்கொள்ளும் பல சந்தர்ப்பங்களில், புகைப்படக் கலைஞன் சாந்தன், ஓவியர் கே.கே.ராஜா, ஓவியர் கருணா, தோழர் பரராசசிங்கம் ஆகியோரின் படங்களைக் காண்பித்து, அவற்றின் வேறுபாடுகளையும், தொழில் நுட்பங்களையும் விளங்கப் படுத்துவதுண்டு. இந்த நால்வரும் ஒருவருக்கொருவர் தமக்கெனத் தனிப் பாணிகளையும், படிமங்களையும் கொண்டிருப்பவர்கள்.

சாந்தன் எடுத்த ஒரு படத்தை 1991இல் தான் பார்த்தேன்.
அதாவது "சாந்தன் எடுத்த படம்" என்று குறிப்பிட்டு தோழர் முத்து எமது பத்திரிகைக்கு அனுப்பி வைத்த படம். அது ஒரு மனித முகம். மறைந்த எழுத்தாளர் சுந்தரராமசாமியின் முகம் அது.
கமெராவின் சாளரத்தினூடாக அளவாகக் கிள்ளியெடுத்த ஒளியைக் கரைத்து, மனித முகங்களை ஒப்பனை செய்யும் வித்தை சாந்தனுடையது என்பதை சுந்தரராமசாமியின் படம் சொன்னது. அதுபோல பல மனித முகங்களின் அழகிய பதிவுகள்.
சாந்தனை, 1993இல் இலண்டனில் இருவரும் ஒரு நிகழ்வைப் பதிவு செய்யும்பொருட்டு சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன். அந்தவொரு சந்திப்பிலேயே புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது; புகைப்படக்கலை தொடர்பான ஆழமான தேடலுக்காகப்




Tamil Times editor ராஜநாயகம்



பேராசிரியர் மு. நித்தியானந்தன்

பயணித்துக் கொண்டிருக்கும் ஒரு கலைப்பயணி என்பதை.
அதன்பின்பு சாந்தனின் கிரியேட்டிவ் படங்கள் சில 1997இல் ஒரு இலக்கியத் தொகுப்பில் பிரசுரமாகியிருந்தன.
1983 ஜூலைப் படுகொலைகள் நினைவாகப் படைக்கப்பட்ட படம் அது.
நட்டமேனிக்குக் குத்தி நிறுத்தப்பட்ட தீக்குச்சிகள் எரிந்து முடிந்த புகைச்சாரல்களும், முட்கம்பிகளும், குருதியும் என அந்தக் காட்சி.



ஈழ, தமிழக கலை இலக்கிய அரசியல் பிரபலங்கள், ஆளுமைகள் எனப் பலரைப் புகைப்படங்கள் எடுத்த, எடுத்துவரும் சாந்தன் 2003இல் ஏ.ஜே கனகரட்ணா அவர்களை யாழ்ப்பாணத்தில் எடுத்த படம்தான் ஏ.ஜேயின் மரணத்துக்குப் பின் பல ஊடகங்களில் பதிவான படமாகும்.

அந்தப் படத்தினைத் இப்பதிவின் தலையங்கத்தில் காணலாம்.

ஒரு புகைப்படக் கண்காட்சியை நிகழ்த்துமாறு பல வருடங்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். மனுசன் மசுந்துவதாக இல்லை. நானும் விடுவதாக இல்லை. இந்தக் குரோணாத் திருவிழா முடியட்டும்.



"ஆரு கேட்டாலும் படம் எடுத்துக் குடுக்கிற ஆள்" என்ற பெயரும் நண்பர்கள் மட்டில் உண்டு.
இதில் சாந்தன் இனிக் கறாராக இருக்க வேண்டும் என்பதைச் செல்லமாக வேண்டிக் கொள்கிறேன். ஐரோப்பிய நாடுகளில் நிகழும் பல அரசியல், அரங்காடல், இலக்கியச் சந்திப்புக்களின் பதிவுகளை அநேகமாக சாந்தன், ராஜா ஆகியோர் செய்து வருகிறார்கள். அவை இவர்களது சுய ஆவணக் காப்பில் நிச்சயம் இருக்கும் என்பதை நாம் நம்பலாம்.
சாந்தனின் புகைப்பட ஆற்றலுக்கு நண்பர் லண்டன் மல்லி ஊக்கம் ஏற்றினார் என்பதைச் சாந்தன் நினைவு கொள்வதுண்டு.

சாந்தனின் இன்னொரு நீண்டகாலக் கலைமுகம் "சிறந்த நாடக நடிகன்"
சாந்தனின் நடிப்பாற்றலைப் பற்றி "அவைக்காற்றுக் கலைக் கழகம்" திரு பாலேந்திரா அவர்கள் எங்காவது எழுதினால் சிறப்பாக இருக்கும்.
இனி சாந்தனின் சில படங்களோடு சற்றுப் பேசிப் பாருங்கள்.
அடுத்த இதழில் இன்னொரு புகைப்படக் காறனோடு சந்திப்போம்.



# ஏகலைவன் அரங்காற்று அனுபவம்

ரெஜி மனுவல்பிள்ளை



அது ஒரு காலம். பாக்கியத்தார் "அன்னை தந்தை தன்னை விட்டே" என்று உரத்த குரலில் பாடும்போது, ஐந்து மைல்களுக்கு அப்பால் இருந்த ஊர்களுக்கும் அப்பாடலை இரவுக்காத்து எடுத்துச் சென்று விடும் என மக்கள் பேசிக் கொண்டார்கள். பிலிப்பு அம்மானின் "ஏலேலோ" என்ற கப்பல் பாடலில் ஏறி மக்கள் உலகின் முக்கிய துறைமுகங்களை தரிசித்து வந்தார்கள். கைக்குட்டையை முக்கோணமாக மடித்து கைவிரல் இடுக்கில் வைத்து துள்ளல் நடையுடன் சாமிநாதர் மந்திரியாக மேடையில் அறிமுகமாவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். கோபங்கொண்ட ராசாவாக, கல்வெட்டு பாடியபடி செங்கோலை தூக்கி எறிந்து, சிம்மாசனத்தை விட்டு துள்ளி இறங்கும் யோகராசாவின் அற்புதமான நடிப்பிலும், பாட்டிலும் மக்கள் கட்டுண்டு கிடப்பர்.



இவ்வாறு எனதூரின் பல கலைஞர்களைப் போல் ஈழத்தின் பல ஊர்களிலும் நாயகர்களும், நாயகிகளும் வலம் வருவார்கள். மக்களின் வாழ்வோடும், நம்பிக்கையோடும் இரண்டறக் கலந்து விட்ட கூத்துக்கலை ஈழத்தில் பெரும்பாலான பிரதேசங்களில் இப்போதும் உயிர்ப்போடு இருக்கிறது. ஆனாலும் இம்மக்களின் கலைகள் "உயர்ந்தோர்" என தம்மை எண்ணிக் கொண்ட சிலரால் ஒதுக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் இருந்த வரலாறு யாவரும் அறிந்ததே. தங்கள் வாழ்வியலோடு ஒன்றிப் போகும் கலைகளை இம்மக்கள் ஒன்றிணைந்து பெரும் கலைப்படைப்புகளாக உருவாக்கி அரங்கேற்றி வந்தனர். இக்கலைகள் பெரும்பாலும் புராண இதிகாசங்களையும், சமய நம்பிக்கைகளையும் பிரதிபலிக்கின்றன. இதனால் இவை மூட நம்பிக்கைகளையும், சாதிய சிந்தனைகளையும் தம்மகத்தே கொண்டிருக்கின்றன என்ற விமர்சனம் "உயர்ந்தோர்" எனப்படுபவரால் முன்வைக்கப் படுவதை நாம் காணலாம். இக் கலைகளுக்கும் மக்களுக்கும் இடையேயான நெருக்கமான உறவை உணர்ந்தவர்களால் இவ்வாறான விமர்சனங்களை இலகுவாக புறந்தள்ள முடியும்.

இந்த வகையில் தமயந்தியின் "ஏகலைவன்" தென்மோடிக் கூத்துப் பிரதி, காலம் காலமாக கடத்தப்பட்டு வந்த ஏகலைவனின் விம்பத்தை புரட்டிப் போடும் ஒரு பிரதியாக அமைகிறது. இவ்வளவு காலமும் ஏகலைவனுக்கு இழைக்கப்பட்ட அநீதி மறைக்கப்பட்டு, அவன் கட்டை விரலை வெட்டிக் கொடுத்ததால், குருவுக்குப் பணிந்த நல் மாணாக்கனாய் புனையப்பட்டு இளம் சந்ததியினருக்கும் புகட்டப்பட்டு வந்துள்ளது. தமயந்தியின் ஏகலைவன் கட்டை விரலை தர மறுத்ததோடு, துரோணரின் கல்வி மறுப்புத் துரோகத்தையும் வெளிக் காட்டி விடுகிறான். இந்த ஏகலைவன் என் மனதுக்கு மிக நெருக்கமானவன். சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக எதிர்வினையாற்றி தன் கட்டைவிரலை தன் குருவுக்கு தட்சணையாக தர மறுத்தவன்.

இப்பிரதியை மேடையேற்ற வேண்டும் என்ற விருப்பத்தை பூனை குட்டியை சுமந்து திரிவது போல் சில வருடங்கள் சுமந்து திரிந்தேன். இவ்வேளையில் நாவாந்துறை சென் மேரிஸ் கனடாக் கிளையின் அப்போதைய தலைவரும், கூத்துக் கலைஞருமான திரு.அசோக் மைக்கல்ராஜா, நாவாய் ஒளி 2019 கலைவிழாவில் கூத்தொன்றை மேடையேற்ற அணுகினார். இதற்காக தமயந்தியை தொடர்பு கொண்டு ஏற்கனவே புத்தக வடிவிலுள்ள சிறுவர்களுக்கான பிரதியை செழுமையாக்க முடியுமா எனக் கேட்டேன். அவர் அதனை மகிழ்வோடு ஏற்றுக்கொண்டு பல புதிய பாடல்களை இணைத்தார்.

தமயந்தியுடன் இணைந்து இக்கூத்தின் பிரதியாக்கத்தில் பயணித்தது மறக்க முடியாத அனுபவம். புகைப்படக் கலைஞனாய், கவிஞனாய், சமூக செயற்பாட்டாளனாய், எழுத்தாளனாய், கடலின் காதலனாய் பன்முகம் கொண்ட தமயந்தியின் கூத்தெழுதும் ஆற்றலைக் கண்டு வியந்து போனேன். கவித்துவம் மிக்க சொற்களால் கூத்தின் மெட்டுக்களை இனிமையோடும், பொலிவோடும் அலங்கரிக்கும் அவரின் கவித்திறன் கண்டு நெகிழ்ந்தேன். சில பாடல்களை 5-10 நிமிடங்களில் எழுதி, ஒலிப்பதிவும் செய்து அனுப்புவார். தென்மோடிக் கூத்தின் நுணுக்கங்கள் பற்றிய பட்டறிவு, கூத்தின் அரங்காற்றுகை தொடர்பான ஆழ்ந்த அனுபவம், அத்தோடு இலக்கியத்துடனும் சமூகத்துடனுமான தொடர்ச்சியான உறவு, சமூகத்தின் ஏற்றத் தாழ்வுகள் மீதான தார்மீக கோபம், இயற்கையாக இவருள் உறைந்துள்ள கவிமனம், மொழியாளுமை என்பன இவரின் வரிகளில் பின்னிப் பிணைந்திருந்தன. ஒரு பல்கலைக்கழகம் கற்றுத்தர முடியாத தென் மோடிக் கூத்தின் வரலாற்றையும், கலைஞர்களின் ஆளுமையையும், கூத்தின் நுணுக்கங்களையும் ஒரு மாணவனுக்குரிய மனநிலையோடு கற்றுக் கொண்டேன். கூத்துப்பிரதி நடிகர்களிடம் கையளிக்கும் போது, இப் பாடல்களை கேட்ட அவர்கள் முகங்களில் அதே வியப்பும், ஆனந்தமும் தெரிந்தது. முதல் நாளே பாடல்களுடன் ஒன்றி விட்டார்கள். பலர் பாடல்களை வேகமாக மனனம் செய்து விட்டதோடல்லாமல், மற்றவர்களின் பாடல்களையும் மனனம் செய்து பாடினார்கள். தென்மோடிக் கூத்தைப் பற்றி இளம் தலைமுறையினர் இவரிடம் இருந்து கற்றுக் கொள்ள நிறையவே இருக்கிறது. கூத்துக்கலையின்



மேல் தமயந்தி கொண்ட தீராக் காதலும், முடிவுறாத தேடலும் என்னை வியப்பிலாழ்த்தியது.

இக்கூத்தின் மேடையேற்றத்தில் பங்கேற்ற கலைஞர்கள் நீண்ட காலமாக கூத்தாடி வருபவர்கள். கனடாவில் கூத்து பற்றிய விழிப்புணர்வும், விருப்பும் மக்களிடையே ஏற்பட முக்கிய காரணம் இக் கலைஞர்களே என்றால் மிகையாகாது. நேரம், பொருளாதார ரீதியான சவால்கள் என்பவற்றையும் மீறி கூத்தின் மீது கொண்ட ஆர்வத்தினால் இவர்கள் தமது தொடர்ச்சியான பங்களிப்பை வழங்கி வருகிறார்கள். கனடாவில் மேடையேறிய பல தரமான கூத்துக்களில் தொடர்ச்சியாக பங்கேற்று வரும் அசோக் மைக்கல்ராஜா, ரொனாட் தேவதாசன், சுதர்சன் சவரிமுத்து, யோசப் தேவதாஸ், குயின்ரன் இன்பதாஸ், மிதுன் சகாயதாசன் என்போர் இங்கு குறிப்பிடத்தக்கவர்கள். கனடாவில் பல மேடைகள் கண்ட அற்புதமான கூத்துக் கலைஞர்கள். இவர்களுடன் தர்சினி அன்ரனி குயின் அவர்களும் வனதேவதையாக மேடையேறினார். பிற்பாட்டில் அருட்பணி வீனஸ் பாக்கியநாதன், டீடாக்கஸ் மரியாம்பிள்ளையும், இசைக் கலைஞர்களாக கனடாவின் புகழ் பெற்ற கலைஞர் இரமணீகரன் சண்முகநாதன், தேவராஜ் சவரிமுத்து இவர்களுடன் கனடாவில் நீண்ட காலமாக கூத்துக் கலையில் தன்னை அர்ப்பணித்தவரும், அது வளர உழைத்தவருமான சட்டத்தரணி மனுவல் யேசுதாசன் அவர்களும் இணைந்து கொண்டார். அத்துடன் காட்சியமைப்பு, ஒலி, ஒளி, தொழில்நுட்பம் என்பவற்றில் வினு ஜெறி குரூஸ் தனது பங்களிப்பை வழங்கினார். இவர்களுடன் மேடை நிர்வாகத்தில் குமணன் தம்பிஐயா, அருண்மொழிவர்மன், குகன் தம்பி ஆகியோர் இணைந்து செயல்பட்டனர்.

கூத்துக்கலை ஆர்வர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் தனிப்படவும், சிறு குழுக்களாகவும் இணைந்து கூத்துக்களை அளிக்கை செய்து வருகின்றனர். தேவதாசிகளின் சதிராட்டம் எவ்வாறு மேட்டுக் குடியின் கலையாக மாறி, வணிகப்பொருளாகி சின்னாபின்னப் படுகிறதோ, அதே போல் கூத்துக் கலைக்கும் நிகழ்ந்து விடுமோ என்ற அச்சம் கூத்தை நேசிக்கும் கலைஞர்களிடம் ஏற்பட்டுள்ளது. ஆனால் ஏகலைவன் கூத்தின் மேடையேற்றத்தின் முன்னர் ஒரு கிராமமே இதனை ஒன்று கூடிச் செய்கிறது என்ற உணர்வு என்னுள் ஏற்பட்டது. கனடாவிலுள்ள நாவாந்துறையைச் சேர்ந்த மக்கள் பலரும் நேரடியாகவும், மறைமுகமாகவும் இக் கூத்தில் தம்மை இணைத்து இருந்தனர். மக்கள் தங்கள் கலையை தாங்களே கையேந்தி முன்நகர்த்தி சென்றதைக் கண்டு மேடையேற்றத்தின் முன்னரே பெரும் மனநிறைவு ஏற்பட்டது. குறிப்பாக புலம் பெயர் நாடுகளின் இயந்திர வாழ்க்கையில் இம்மக்களை இணைக்கும், கூடிக் கொண்டாடப்படுவதற்கான கணங்களை வழங்கும் களமாக "மக்கள் கலை" அமைவதைக்காண பெரும் மகிழ்வு ஏற்பட்டதோடு, எம் முன்னோர்களின்பால் நெருக்கமும், பெருமிதமும், நன்றியுணர்வும் ஏற்பட்டது.



பணக்கூத்து (அரைச்சோடனை) வேளையில் கலைஞர்களுக்கு பார்வையாளர்கள் சால்வை அணிவித்து கவுரவப் படுத்தல்



இந்நிகழ்வில் ஒன்றாக, ஊரின் வழமையான கூத்துச் சடங்கான பணக்கூத்தும் இடம் பெற்றது. பணக்கூத்து என்பது, கூத்து மேடையேற்றத்தின் செலவுகளுக்காக எமது ஊரில் நிதி சேகரிக்கச் செய்யும் ஒரு சடங்காகும். இது எமது பண்பாட்டின் அடையாளம், எமது இளம் தலைமுறையும் இதனை அறிந்து கொள்ள வேண்டும் என்று தமயந்தி வற்புறுத்தினார். மேடையேற்றத்திற்கு சில தினங்களுக்கு முன்பாக, ஒரு பயிற்சி நாளில் பணக்கூத்தை ஏற்பாடு செய்து, எல்லோருக்கும் அறிவித்தோம். நடிகர்கள் அரைச் சோடினையுடன் மக்கள் முன் கூத்து பாடல்களை பாடி ஆடினர்.

கூத்துக் கலையில் ஆர்வம் உள்ள பலரும், கலைஞர்களின் உறவினர்களும் எதிர் பார்த்ததை விட அதிகமாகவே கலந்து கொண்டனர். குறிப்பாக பெற்றோர் பணம் கொடுத்து மாலைகளை வாங்கிக் கொடுக்க சிறுவர்கள் உற்சாகமாக நெறியாளர், நடிகர்கள், வாத்தியக் கலைஞர்கள், பக்கபாட்டுகாரர்களுக்கு அணிவித்தனர். மகிழ்ச்சியும், ஆரவாரிப்புமாக அரங்கம் நிறைந்து, எமது இளமைக்கால நினைவுகளுக்கு எம்மை இட்டுச் சென்றது.




கூத்துக் கலை அடுத்த தலைமுறைக்கு கடத்தப்படுதலின் முக்கியத்துவம் உணர்ந்து பல சிறார்களையும் கூத்தில் இணைத்தேன். சிறுவர்களையும் கூத்துக்குள் உள்வாங்க வேண்டும் என்ற நீண்டநாள் கனவு இக்கூத்து மேடையேற்றத்தில் நிறைவெய்தியது. சிறுவர்களை இணைத்து வனக் காட்சி ஒன்றை உருவாக்கி சுமார் 16 சிறுவர்கள் மேடையில் மரங்களாகவும், மிருகங்களாகவும் உற்சாகமாகவும், விளையாட்டாகவும் நடித்தார்கள். இக் காட்சியே பலரின் பாராட்டை பெற்றதாக அமைந்தது. சிறுவர்களின் பெற்றோரும், அவர்களின் பெற்றோரும் சிறுவர்களுக்கான உடை மற்றும் ஒப்பனையில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தினர். இவர்களின் உழைப்பாலும், பிள்ளைகளின் ஈடுபாட்டாலுமே இக்காட்சி மேடையில் சிறப்பாக அமைந்தது.

சென்.மேரீஸ் கனடா கிளை நிர்வாகிகளும், அங்கத்தினரும், நிதி ஆதரவாளர்களும், குடும்பத்தினரும் ஒன்றிணைந்த கூட்டு முயற்சி ஊரில் கூத்து போடும் மனநிலையை உருவாக்கியது. பகிர்ந்தளிக்கப்பட்ட பொறுப்புகளால், மேடையேற்றத்திற்குமுன் மனதில் நம்பிக்கை துளிர்த்த தருணம் மக்களின் இக்கலை மக்களிடமே கையளிக்கப்பட்டு விட்டதான உணர்வை என்னுள் ஏற்படுத்தியது. மேடையேற்றத்தின் பின்னரான விமர்சனங்களால் அனைவரும் மகிழ்ச்சியில் திளைத்தனர். பல பெற்றோாகள் தமது பிள்ளைகள் ஏகலைவன் கூத்தின் பாடல்களை வீட்டில் பாடி ஆட, அதனை கைப்பேசியில் பதிவு செய்து அனுப்பி வைத்தனர். முறைசாரா கல்வி முறையாய் கூத்துக்கள் இச்சிறார்களின் மனங்களில் ஒன்றிப் போனது வியப்பை அளித்தது. நாளை இவர்கள் இக்கலையை தமது அடையாளமாய் பெருமையோடு அரங்காடுவர் என்ற நம்பிக்கை எம்முள் எழுந்தது. □




En fin sommer dag.
Kavin, 8år




Enhjørning som er blitt til menneske.
Aurura 5 år



Bumblebees are lager than Honeybees, they are also fuzzy
They are important pollinators.




They are black and yellow.
There are 255 species of Bumblebees.
Bumblebees are important because then food can grow.
Bees build their nests close to the ground, under piles of woods, nder dead leaves, and maybe underground.

People say that bees are unable to fly and defy aerodynamics. Bumblebees can be any size, but the queen is the largest, which can grow 1.6 inches ( 4centimeters ) long, they are also three to four times larger than american bumblebees.
It`s not surprising to find bumble bees all over the world.
Bumblebees are the most social in the Animal Kingdom.

Thanoosh
13.år



Fine damer på tur
Manal 4 å



**கீழே விழுந்த சட்டை - முல்லாவின் கதைகள்**

ஒரு நாள் முல்லா தமது மாடியில் ஏதோ வேலையாக இருந்தார். கீழே சமையலறையில் அவர் மனைவி சமையல் செய்து கொண்டிருந்தார். மாடியிலிருந்த முல்லா திடீரெனக் கால் தவறிக் கீழே விழுந்து விட்டார்.

தடால் என்ற சத்தத்துடன் எதோ ஒன்று கீழே விழுந்ததை உணர்ந்த அவரது மனைவி திடுக்கிட்டு அது என்ன சத்தம் என்று கேட்டார்.

கீழே விழுந்த முல்லா தன் உடம்பில் ஒட்டியிருந்த மண்ணைத் தட்டி விட்டவாறு ஒள்றுமில்லை மாடியிலிருந்து என் சட்டை கீழே விழுந்து விட்டது என்றார்.
ஒரு சட்டை விழுந்து விட்டதனாலேயா அவ்வளவு பெரிய சத்தம் கேட்டது? என்று மனைவி ஆச்சரியத்துடன் கேட்டாள்.

சட்டைக்குள் நான் இருந்தேன் என்று கூறி முல்லா சமாளித்தார். அவர் மனைவிக்கு அழுவதா சிரிப்பதா என்றே தோன்றவில்லை.

# கடைசிப் பக்கம் Siste Side

måneds bilde

# சக்கரம் போன போக்கு - சைக்கிளோட்டம்



-ஏ.எம். றியாஸ் அகமட், (சிரேஸ்ட விரிவுரையாளர் தென்கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை)

## (மகழூர், கிரான்குளம், அம்பிலாந்துறை) மீன்கொத்து மீன்பிடி (Brush pile fisheries):

வாவிகளின், கடல்நீரேரிகளின், கழிமுகங்களின் ஆழம் குறைந்த (2 தொடக்கம் 3 மீற்றர்) பகுதிகளில் கண்டல் தாவரங்களின் அல்லது வேறு மரங்களின் கிளைகளை வட்ட வடிவில் இட்டு, நீரோட்டத்தினால் அடித்து செல்லாதவாறு கம்புகளை நட்டு விடுவார்கள். சுமார் 2 தொடக்கம் 4 வாரங்களுக்குள் இந்தக் கிளைகளில் அல்காக்கள் வளரத் தொடங்கும். இதனால் மீன்கள் கவரப்படும். பின்னர் இது ஒரு சிறிய சூழற்றொகுதியாக உருமாற்றம் பெறத் தொடங்கும்.

மீன்கள் வாழ்வதற்கும், ஒழிந்து கொள்வதற்கும், மீன்கள் கிளைகளில் முட்டைகளை ஒட்டி வைத்து குஞ்சு பொரிப்பதற்கும், இனப்பெருக்கம் செய்வதற்கும், மீன்குஞ்சுகளை வளர்ப்பதற்கு இந்த மீன்கொத்து சூழற்றொகுதி உதவுகின்து. இதன் காரணமாக மீன்களின் குடித்தொகை அதிகரித்துக் காணப்படும். பின்னர், இந்த நீர் நிலைகளில் கிளைகளைப் போட்ட இடங்கள் வலைகளினால் சுற்றிவளைக்கப்பட்டு, மீன்கள் பிடிக்கப்படுகின்றன. சிலவேளை தற்காலிகமாக கிளைகளை அகற்றியும் மீன்களை பிடிப்பார்கள். இடப்பட்ட கிளைகள் காலக்கிரமத்தில் அழுகத் தொடங்க, அவைகளுக்குப் பதிலாக புதிய கிளைகளை பிரதியீடு செய்வார்கள். ஒரே இடத்தில் இவ்வாறான மீன் பிடித்தல் முறை நீண்ட காலத்திற்கு தொடர்ச்சியாகச் செய்யப்படும். இந்த முறை மீன்கொத்து முறை (Brush pile fisheries) என அழைக்கப்படும். சிங்களத்தில் "அத்து கொட்டு அல்லது மாஸ் அத்து" என அழைக்கப்படும். மீன்கொத்து மீன்பிடி முறை, மீன்களை ஒன்று கூட்டும் (Fish aggregating device) சாதனமாக ஒன்றாக கருதப்படுகின்றது.

மீன்கொத்து அல்லது குழைவைத்து மீன்பிடிக்கும் முறையானது தாய்லாந்து, மியன்மார் போன்ற நாடுகளில்ஆரம்பகாலங்களில் பயன்படுத்தப்பட்டது. அங்கு மூங்கில் கிளைகள், மூங்கில் தடிகள் கொண்டு மீன்கள் பிடிக்கப்பட்டன. பிற்பட்ட காலங்களில் இவை இலங்கையில் பரவலடைய ஆரம்பித்தது. தற்போது இலங்கையின் பல பாகங்களிலும் காணப்படுகின்றது. மற்றும் கடற்பகுதிகளில் இந்த மீன்பிடி முறையானது மன்னார் மாவட்டத்தில் செய்யப்படுகின்றதாக அறியப்படுகின்றது. இது மீன்பிடி முறைக்கு குறைந்த முதலீடே போதுமானது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மீன்கொத்து மீன்பிடிமுறை, அரசாங்கத்திற்கு சொந்தமான நீர்நிலைகளில் நடைபெற்றாலும், இந்த இடங்களுக்கான உரிமை பரம்பரை பரம்பரையாக (தந்தையிலிருந்து மகன்களுக்கு) இடமாற்றப்படுகின்றது. இது பாரம்பரிய உரிமை (traditional right) எனப்படுகின்றது.

மீன்கள் பிடிபடும் காலங்களில் 4 தொடக்கம் 6 வாரங்களுக்கொரு முறை மீன்களைப் பிடிப்பார்கள். இறால் பிடிபடும் காலங்களில் ஒவ்வாரு நாளும் மீன்பிடியில் ஈடுபடுவார்கள். இது பிரதேசங்கள், நீர்நிலைகளைப் பொறுத்து சில மாற்றங்களுக்கு உள்ளாகும்.

பெரும்பாலும், இந்த மீன்பிடியை இரண்டு பேர், இரண்டு மணித்தியாலங்களில் செய்து முடிப்பார்கள். கண்டல் கிளைகளைப் போட்ட இடத்தில், சுற்றி வளைத்து 12 தொடக்கம் 14 கண்டல் கம்புகளை நட்டு, அந்தக் கம்புகளைச் சுற்றி வளைத்து வலைகளை இட்டு, அதன் பின்னர் அதற்குள் இருக்கும் சிறிய கிளைகளை கவனமாக அகற்றி, அதற்குள் இருக்கும் மீன்களை பிடிக்கத் தொடங்குவார்கள். கோடை காலங்களில், நீர் தெளிவாக இருக்கும் போது, மீன்பிடி அதிகமாகவும், மாரி காலங்களில் அல்லது வெள்ளகாலத்தில் குறைவாகவும் காணப்படும். வெள்ளகாலத்தில் வருமானம் 10 மடங்கு குறைவாக காணப்படும்.

இலங்கையைப் பொறுத்த வரையில் சில பகுதிகளில் ஒரு குடும்பத்திற்கு 20-40 மீன் கொத்துக்கள் காணப்படும். மீன்பிடியில் 2 தொடக்கம் 3 ஆண்கள் ஈடுபட, பெண்கள் மீன்களை விற்றல், வலை திருத்துதல், மேலதிக மீன்களைப் பதப்படுத்தல் போன்ற வேலைகளில் ஈடுபடுவார்கள். முன்னொரு காலத்தில் கொத்துமுறை மீன்பிடியில், மணலை (கயல்), ஒட்டி, ஓரா, வெள்ளை இறால், பூ இறால் வகைகள், சள்ளல் (செத்தல்), காரல், முரல், விளா, மற்றும் சில அலங்கார மீன் வகைகள் பிடிபட்டன. தற்போது இந்த மீன்களை 1950களின் ஆரம்பத்தில், கிழக்கு ஆபிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்து, இலங்கையின் நீர்நிலைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட திலாப்பியா மீன்களே பிரதியீடு செய்கின்றன. மீன்கொத்து முறை எப்போதும், வாவிகளிலும், கடல் நீரேரிகளிலும் செய்யப்படுவதாக இருக்காது. கடற் பிரதேசங்களிலும் செய்யப்படுவதுண்டு. வடக்கின் மன்னார் பிரதேசங்களில் ஆழங்குறைந்த கடற் பிரதேசங்களில், கடற்கரையிலிருந்து 17 கிலோமீற்றர்களுக்கு அப்பால், கொழிஞ்சி, யாழி, பாலை, கண்ணா, றைசோபோறா போன்ற தாவரங்களின் கிளைகளைப் பாவித்து து?ண்டில் மூலம் கணவாய்களைப் (ஓட்டுக் கணவாய், பீலிக் கணவாய்) பிடிக்கின்றார்கள். ஒரு தடவையில் 100 தொடக்கம் 300 கிலோ கிராம் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. கடலில் செய்யப்படும் மீன்கொத்து முறைக்கு, இயந்திரப் படகுகள் அவசியமானதாகும். இந்த மீன்கொத்து மீன்பிடி முறைக்குள் கண்டல் தாவரங்களை வெட்டிபோடுதல், டைனமைற்றைப் பாவித்து மீன்பிடிப்பதனால் இந்த மீன்பிடி முறையானது தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறையாகின்றது.

நகரமயமாக்கம், நீர்நிலைகள் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்படல், நீர்நிலைகள் மாசுபடல், தாவரங்கள் இல்லாமற் போதல், அந்தத் தாவரங்களை இவர்களே இல்லாமலாக்குதல் போன்ற பல காரணங்களால் இந்த மீன்பிடியின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. சுற்றுச்சூழல் நேய அடிப்படையில், சட்டவரம்புகளுக்கு உட்பட்டு செய்யும்போது, இந்த மீன்பிடி முறை நிலைபேறானதாக இருக்கும்.

Bergen Tamilsk Avis
Ansvarlig redaktør: Julius Antonipillai - Adresse: Krohnegården 5b, 5146 Fyllingsdalen.- Telefon: 924 636 74
E-Post: ttoosai@gmail.com / antonipillai@hotmail.com
Org.nr: 926 840 320 - ISSN 2703-8440